Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

**தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்**

அசல் 22 கரட் தங்கத்தில்
நவீன காலத்திற்கேற்ப
புதிய டிசைன்களில்
தங்க நகைகளை
செய்து பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்
சிறி கருமாரி நகையகம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
205/6, கஸ்தூரியார் வீதி,
ராஜா தியேட்டர் கட்டிடம்,
யாழ்ப்பாணம். தொ:பே: 222 5385.

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆவணி- 27 ஆம் நாள் ஹிஜ்ரி 1426 சஃபான் 07 (12.09.2005) திங்கட்கிழமை இதழ்:347



### எனக்கு பாடம் நடத்தவேண்டாம்

## கட்சி மாநாட்டில் சந்திரிகாவிடம் மகிந்த நேரடியாகவே தெரிவிப்பு!

### அம்பலமாகிறது உட்கட்சிப் பூசல்

கொழும்பு —

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 54 ஆவது வருடாந்த மாநாட்டு மேடையிலேயே ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் - பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து கொழும்பு ஊடக வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிடுகையில் -

கடந்த செப்ரெம்பர் 5 ஆம் திகதி கொழும்பில் ஊடகவியலாளர்களை ஜே.வி.பியினர் சந்தித்து நிபந்தனை ஆதரவு குறித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்புக்கு மறுநாள் கூடிய சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக் கூட்டம், மகிந்த ராஜபக்ஷவை

(11 ஆம் பக்கம் பார்க்க)

### ஜே.வி.பியுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்பாட்டால்

# கூட்டணிக் கட்சிகளின் ஆதரவையும் இழக்கும் நிலையில் பிரதமர் மகிந்த!

கொழும்பு —

ஜே.வி.பியுடன் உடன்பாடு செய்துகொண்டதால் நெருக்கடியை எதிர்கொள்ளும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, சுதந்திரக் கட்சியின் ஒரு பகுதியினரின் ஆதரவை இழந்திருப்பதுடன் -

பொதுஜனஐக்கிய முன்னணியில் இடம்பெறுள்ள இடதுசாரி கட்சிகள், தேசிய ஐக்கிய முன்னணி போன்றவற்றின் ஆதரவையும் இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஜே.வி.பியுடன் தன்னிச்சையாக உடன்பாடு செய்துகொண்டதால் ஜனாதிபதி சந்திரிகாவின் வெறுப்புக்குள்ளாகியிருக்கும் மகிந்த ராஜபக்ஷ மீது சுதந்திரக் கட்சித் தலைவர்கள் பலர் கோபமாக உள்ளனர்.

இதனால், ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக செயற்படுவதில்லையென பல முக்கியஸ்தர்கள் முடிவுசெய்துள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல உறுமயவுடன் நாளை உடன்பாடு!

கொழும்பு —


பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஜாதிக ஹெல உறுமயவுக்கும் இடையில் நாளை ஒப்பந்தம் செய்துகொள்ளப்படவுள்ளது.

கண்டி தலதா மாளிகையில் இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனினும் தமது (12 ஆம் பக்கம் பார்க்க)

### திருடிக் கொண்டுவந்த பசு மாட்டை

## இறைச்சிக்கு வெட்டியோர் சிக்கினர்; தீயிட்டெரிக்கப்பட்டது கொல்களம்!



யாழ்ப்பாணம் —

## திருகோணமலையில் கிரனேட் வீச்சு!

திருகோணமலை —

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அபயபுரச்சந்தியில் நேற்றிரவு இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட கிரனேட் வீச்சில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் உட்பட இருவர் காயமடைந்தனர்.

நேற்றிரவு 9.30மணியளவில் இடம்பெற்ற

## ஹெல உறுமயவுடன் நாளை உடன்பாடு!

கொழும்பு —

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஜாதிக ஹெல உறுமயவுக்கும் இடையில் நாளை ஒப்பந்தம் செய்துகொள்ளப்படவுள்ளது.

கண்டி தலதா மாளிகையில் இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனினும் தமது (12 ஆம் பக்கம் பார்க்க)

## நேரடிவிவாதத்திற்கு ஐ.தே.க அழைப்பு!

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக சுதந்திரக் கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுடன் நேரடி விவாதம் நடத்த ரணில் தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷ - ஜே.வி.பி உடன்படிக்கைக்கு சுதந்திரக் கட்சித் தலைவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்ப்புத் தெரிவித்த நிலையிலும் மகிந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

### திருடிக் கொண்டுவந்த பசு மாட்டை

## இறைச்சிக்கு வெட்டியோர் சிக்கினர்; தீயிட்டெரிக்கப்பட்டது கொல்களம்!



யாழ்ப்பாணம் —

சினைப்பட்டிருந்த பசு மாட்டை திருடி வந்து கொல்களத்தில் வைத்து இறைச்சிக்காக வெட்டிய ஆறு பேரை - மாட்டின் உரிமையாளர் - அயலவர்களின் உதவியுடன் பொலிஸாரிடம் பிடித்துக் கொடுத்தார்.

இதனையடுத்து மாடு வெட்டப்பட்ட நல்லூர் பிரதேசசபையின் கொக்குவில் கொல்களம் பொதுமக்களால் உடைக்கப்பட்டதுடன் தீயிட்டுக்கொளுத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலகத்துக்குட்பட்ட வீடொன்றில் வளர்க்கப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் கிரனேட் வீச்சு!

திருகோணமலை —

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அபயபுரச்சந்தியில் நேற்றிரவு இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட கிரனேட் வீச்சில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் உட்பட இருவர் காயமடைந்தனர்.

நேற்றிவு 9.30மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி - பிரதமரிடையே முரண்பாடு இல்லையாம்!

கொழும்பு —

ஜனாதிபதிக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் எவ்வித முரண்பாடுகளும் இல்லையென அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஊவா பரணகம தேர்தல் தொகுதியில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கந்த - கரப்பொல பகுதியில் இரு இளைஞர்கள் சுட்டுக்கொலை!

பொலனறுவ —

கருணா குழுவுடன் தொடர்புடையவர்களெனக் கருதப்படும் இரண்டு இளைஞர்கள் பொலனறுவ மாவட்டம் வெலிக்கந்தவிலுள்ள கரப்பொல என்ற இடத்தில் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கரப்பொலவைச் சேர்ந்த குலசேகரம் உதயகுமார் (வயது 19), முத்துக் கல்லைச் சேர்ந்த முத்துராஜா முரளிதரன் (வயது 22) ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர். கடந்த சனி இரவு தனது வீட்டிலிருந்து வயலுக்குக் காவல்காக்கச் சென்ற முத்துச் சாமி முரளிதரன் என்ற இளைஞர் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டிருந்தார். இவர் சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர் சடலம் வயல் கரையோரமாக வீசப்பட்டிருந்தது. இந்தக் கொலை (12 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்


## அனுமதியின்றி பிரவேசித்த மூன்று பொலிஸார் கைது!

மன்னாரில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான அரிப்பு கிராமத்துக்கு புலிகளின் முன்னனுமதி பெறாமல் சென்ற மூன்று பொலிஸார் தமிழீழ காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டு மேலதிக விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஒருவர் ஒருவார காலமாக கொக்குபடையான் பகுதியில் சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவதாகக் கிடைத்த தகவலையடுத்து அவரை கைதுசெய்வதற்காக சிறுவர் பாதுகாப்புக்குழுவைச் சேர்ந்த இரண்டு பெண் பொலிஸார் உட்பட ஐந்து பொலிஸாரும் நான்கு கிறிஸ்தவ குருமாரும் கொழும்பிலிருந்து சென்றனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி - மகிந்த உடன்பாட்டினால் தனியரசுக் கோரிக்கை வலுப்பெறும்!

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு —

ஜே.வி.பியுடன் பிரதமர் மகிந்த செய்து கொண்ட உடன்படிக்கையால் - புலிகள் தனியரசுக் கோரிக்கையை வலியுறுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அம்பாந்தோட்டை, திஸ்ஸ மகராம ஆகிய (12 ஆம் பக்கம் பார்க்க)



ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com. *Your friend in the skies...*

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



### ஆனையூர் விளையாட்டுக்கழகம் நடத்தும்

# 12 ஓவர்கள் கிரிக்கெட் போட்டியில் நான்கு அணிகள் வெற்றிபெற்றன!

யாழ்ப்பாணம்—

யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன் ஆனையூர் யூனியன் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்டுவரும் 9 பேர் பங்குபற்றும் 12 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் நேற்றைய ஆட்டத்தின் போது பிடாரி கோவில் விளையாட்டுக்கழகமும், யூனியன் விளையாட்டுக்கழகமும், நொதோன் (பச்சை) விளையாட்டுக்கழகமும், சுதுமலை அம்பாள் விளையாட்டுக்கழகமும் வெற்றிபெற்றன.

முதலாவது ஆட்டத்தில் நவாலி லெவன் ஸ்ரார் விளையாட்டுக்கழகத்துடன், பிடாரி கோவில் அணி மோதியது. லெவன் ஸ்ரார் அணி 12 ஓவர்களில் அனைத்து விக் கெட்டுக்களையும் இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றது. லெவன்ஸ்ரார் விளையாட்டுக் கழக வீரர் வினோதன் 13 ஓட்டங்களைப் பெற்றார். பிடாரி கோவிலடி கழக வீரர்களான சயந்தன், ஐங்கரன் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பிடாரி கோவிலடி விளையாட்டுக் கழகம் 7 விக்கெட்டுக்களை இழந்து 44 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. இந்த அணி சார்பில் சுரேஷ் குமார் 8 ஓட்டங்களைப் பெற்றார். லெவன் ஸ்ரார் விளையாட்டுக் கழக வீரர்கள் ராதா, கரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

அதனைத் தொடர்ந்து யூனியன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்தாட ஒலிம்பிக் விளையாட்டுக்கழகம் களமிறங்கியது.

யூனியன் விளையாட்டுக் கழகம் 12 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது.

நெவில் 25 ஓட்டங்களைப் பெற்றார். ஒலிம்பிக் விளையாட்டுகழக வீரர் ரமேஸ் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஒலிம்பிக் அணி 2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 22 ஓட்டங்களைப் பெற்றது. யூனியன் விளையாட்டுகழக வீரர் சனா, சுகி தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

நொதோன் (பச்சை) விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, கலைமகள் விளையாட்டுக் கழகமும், சுதுமலை அம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, இளந்தென்றல் விளையாட்டுக் கழகமும் மோதவிருந்தபோதும் கலைமகள், இளந்தென்றல் விளையாட்டுக் கழகங்கள் உரிய நேரத்தில் சமுகமளிக்காமையால் நொதோன் (பச்சை), சுதுமலை அம்பாள் விளையாட்டுக்கழகங்கள் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

## ‘எக்கோ’ நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்—

உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் ஆங்கில டிப்ளோமா மாணவர்களின் எக்கோ நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் புதன்கிழமை காலை 10 மணிக்கு நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

என்.ரஞ்சித்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நிறுவனத்தின் இயக்குநர் ரி.இராஜரட்ணம் பிரதம விருந்தினராகவும், யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத் துறையைச் சேர்ந்த எஸ்.ரமேஸ், எஸ். நவீந்திரன் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையைச் சேர்ந்த எஸ்.பத்மநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## தொழிற்சங்க நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டிலுள்ள அனைத்து தொழிற்சங்கங்களின் நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளதால் தொழிற்சங்கங்களின் நிர்வாகிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராஜா தெரிவித்தார்


நமது ஈழநாடு

## மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை - இலக்கிய போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

### போட்டிகளுக்கான விதிகள்

**சிறுகதை மற்றும் கவிதைப்போட்டி**

❖ படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும். மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.

❖ சிறுகதை யாவும் தெளிவான எழுத்தில் எழுதப்பட்டோ தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் தட்டச்சில் 6 பக்கங்களுக்குள்ளும் இருப்பது நல்லது.

❖ கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 50 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

❖ படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:- இந்தப் போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி**

மேற் பிரிவு

தலைப்பு - தமிழ் மாணவர்களின் கல்வியும்... வெகுசனத் தொடர்பு ஊடகங்களும்.

மத்திய பிரிவு

தலைப்பு - தமிழ் மாணவர்களும் வாசிப்புப் பழக்கமும்

### நிபந்தனைகள்

❖ கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.

❖ கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

❖ கட்டுரைகள் ஆகக்குறைந்தது 1500 சொற்களுக்கு குறையாமலும் 2000 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.

❖ கட்டுரையை தேர்ந்தெடுப்பதில் நடுவர் குழுவினது தீர்ப்பே இறுதியானது.

ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 25.09.2005

போட்டிக்கான ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரிகள்:

கலை இலக்கிய கட்டுரைப்போட்டி
“நமது ஈழநாடு”
267 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு பணிமனை
யாழ்.சாலை
கிளிநொச்சி.



சிறு விளம்பரம்

### இலக்கிய நூல்

இனி வசந்த காலம் - எஸ்.பி. கிருஷ்ணன் சிறுகதைகள் ரூபா 365.00. கிடைக்குமிடம் சரஸ் புத்தக சாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம் - சிறிகோணேஸ்வரா புத்தக சாலை, சாவகச்சேரி - அறிவமுது, கிளிநொச்சி.

### வேலைக்கு ஆள் தேவை

கண்ணாடி வெட்டுவதிலும், கண்ணாடி சம்பந்தமான வேலைகளில் அனுபவமுள்ளவர்கள் எமது கண்ணாடிக் களஞ்சியத்தில் வேலை செய்வதற்குத் தேவைப்படுகிறார்கள்.

தொடர்பு:-
தயோதரன்
கண்ணாடிக்களஞ்சியம்,
இல.57, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம். (2051)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
அஜித், ஜோதிகா, வடிவேல் மற்றும் பலர் நடித்த
ராஜா
காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சத்தியராஜ், நமீதா, மதுமிதா, வடிவேலு நடித்த
இங்கிலீஸ்காரன்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு)
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த
தொட்டி ஜெயா
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு - நியூ புகழ் - எஸ்.ஜே.சூர்யா, நிலா



அன்பே ஆருயிரே
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
ரவிகிருஷ்ணா, கோபிகா, பிரகாஷ்ராஜ், ரேவதி மற்றும் பலர் நடித்த
பொன்னியின் செல்வன்
காட்சிகள்:- 11.00, 3.00, 7.00, 10.00 (பழைய நேரம்)


### சாவகச்சேரியில்

## பனை, தென்னைவள சங்கத்தினர் பொங்கு தமிழ் எழுச்சிப் பிரசாரத்தில்!

சாவகச்சேரி—

சாவகச்சேரிப் பகுதியில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையில் சாவகச்சேரி தெங்கு பனம்பொருள் அபிவிருத்திச் சங்கத்தினர் ஈடுபடுவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

பொங்கு தமிழ் எழுச்சிப் பிரகடன நிகழ்வு தொடர்பாக சாவகச்சேரி தெங்கு பனம்பொருள் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள், பணியாளர்களுக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் மா. கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவின் சார்பில் தென்மராட்சிப் பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் க.அருந்தவபாலன் உரையாற்றினார். சங்க உறுப்பினர்களும், பணியாளர்களும் சேர்ந்து தங்கள் பகுதிகளிலுள்ள மக்களுக்கு பிரகடன நிகழ்வு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதென்றும், மாதர் சங்க உறுப்பினர்கள் பெண்களுக்கான பரப்புரைகளில் சிறப்பாக ஈடுபடுவதென்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## தொலைபேசி இயக்குநர், வரவேற்பு அலுவலர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றன

மானிப்பாய்—

பெண்கள் வலுவூட்டல் சமூகநல அமைச்சில் நிலவும் தொலைபேசி இயக்குநர் மற்றும் வரவேற்பு அலுவலர் பதவிகளுக்கு - பெண்கள் வலுவூட்டல், சமூகநல அமைச்சின் செயலாளர் அ.நி.ந. அமரதுங்கவால் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் - க.பொ.த (சாதாரணதர) பரீட்சையில் தமிழ் மொழி, கணிதம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக ஆறு பாடங்களுக்கு குறையாது இரண்டு தடவைகளுக்கு மேற்படாது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் இந்த மாதம் 16ஆம் திகதியன்று 18வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

எனவே விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை உரிய முறையில் தயாரித்து எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக செயலாளர், பெண்கள் வலுவூட்டல் சமூகநல அமைச்சு, 5ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கும்படி கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் - அரச சேவையில் தொலைபேசி இயக்குநர்/வரவேற்பு அலுவலர் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளல் - 2005 எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

இதன் மேலதிக தகவல்களை கடந்த 2ஆம் திகதி வெளிவந்த அரச வர்த்தமானியில் பார்வையிடலாம்.

(100)

## கட்டாக்காலி நாய்களை அழிக்குமாறு கோரிக்கை

ஊர்காவற்துறை—

ஊர்காவற்துறை வைத்தியசாலைக்கு முன்பாக அலைந்து திரியும் கட்டாக்காலி நாய்களை அழிக்குமாறு அந்தப் பகுதி மக்கள் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஊர்காவற்துறை வைத்தியசாலைக்கு முன்பாகப் பெருமளவான கட்டாக்காலி நாய்கள் வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்களையும் வீதியால் செல்லும் பயணிகளையும் கடித்து, துன்புறுத்தி வருகின்றன.


வைத்தியசாலைக்கு முன்பாக அலைந்துதிரியும் கட்டாக்காலி நாய்களை அழித்து, அந்த வீதியினூடாக நோயாளர்களும், பொதுமக்களும் அச்சமின்றி செல்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(44)


## 25 ஆம் ஆண்டு வெள்ளி விழா வாழ்த்து

பாரதிபுரம் கிழக்கு, 155 ஆம் கட்டை கிளிநொச்சியில் வசிக்கும்

### சுப்பிரமணியம் நேசமலர்



தம்பதியினர்
தமது 25 ஆம் ஆண்டு
திருமண நிறைவு நாளை
நிகழும் பார்த்தீப வருடம்
ஆவணி மாதம்
27 ஆம் திகதி
(12-09-2005) திங்கட்கிழமை
இன்று
தமது இல்லத்தில்
மிக மகிழ்ச்சிகரமாகப்
பிள்ளைகளுடன்
கொண்டாடுகிறார்கள்.
இவர்களை இன்னும்
பல்லாண்டு காலம் நலம்
பெற்று இனிது வாழ வேண்டும்
என்று வாழ்த்தும் பிள்ளைகள்.

சு.அனிற்றா
(கலைப்பீடம், 3ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்)
சு.சுரேகா
(தமிழீழ நிர்வாகசேவை நடுவப் பணியகம், பாரதிபுரம்)
சு.ரூபிகா
(இளைஞர் சேவை மன்றம், தையல் பயிற்சி, 155ஆம் கட்டை)
சு.தன்மதன்
(க.பொ.த.சாதாரண தரம், கிளி/மத்தியகல்லூரி)
சு.மிதுலா (ஆண்டு 10, கிளி/மத்தியகல்லூரி)
மற்றும் உறவினர்கள்.

(1980)

# புலிகள் கெரில்லாத் தாக்குதலை மீண்டும் ஆரம்பித்துள்ளனராம்!

## இராணுவ அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு

யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறி விடுதலைப் புலிகள் கெரில்லாத் தாக்குதல் நடவடிக்கைகளை கிழக்கில் மீண்டும் ஆரம்பித்துள்ளனர் என - கிழக்கு மாகாண சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எதிரிகள் மீது வெற்றிகரமாகத் தாக்குதல் நடத்தும் முக்கிய யுத்த நடவடிக்கையாக இதனை செயற்படுத்துவதானது, மிக மோசமான யுத்தநிறுத்த மீறலாகும்.

கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பில் பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலும் இவ்வாறானதே. பாதுகாப்பு ரோந்து நடவடிக்கைகளுக்காக நடந்துசென்றுகொண்டிருந்த அவர்கள் திடீரென வாகனத்தில் செல்லத் தீர்மானித்ததாகவும், அதனால் ஏற்பட்ட சேதம் குறைவாக இருந்ததாகவும் - அவர்கள் நடந்து சென்றிருந்தால் பெருமளவு சேதங்கள் ஏற்பட்டிருக்கக்கூடும் எனவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கில் பாதுகாப்புப் படையினர் மீது முன்னர் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும், தற்போது அவர்கள் மறைந்திருந்து தாக்குதலை நடத்த ஆரம்பித்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகளை எதிர்காலத்தில் அதிகரிப்பதற்கு அவர்கள் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதென்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

# சுதந்திர தேர்தலை உறுதிப்படுத்த சுசில் பிரேம ஜயந்த கோரிக்கை!



கொழும்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்தப்படுவதை உறுதிப்படுத்துமாறு - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த - தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலின்போது வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் பரவலாக வன்செயல்கள் இடம்பெற்றதாக ஐரோப்பிய ஒன்றியமும், உள்ளூர் கண்காணிப்பாளர்களும் தெரிவித்திருந்தனர். எனவே - இதனைக் கருத்திற்கொண்டு வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பது உட்பட சகல தேர்தல் நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்த வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# தேசிய முஸ்லிம் காங்கிரஸின் செயலர் இல்லம் மீது தாக்குதல்

கொழும்பு

தேசிய முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் எச்.எம். ஹாரிஸின் தெஹிவளை இல்லம் கடந்த வெள்ளிக்கிழமை காலை இனந்தெரியாத நபர்களின் தாக்குதலுக்குள்ளானது.

சம்பவத்தின்போது அவரோ அல்லது பாதுகாப்பு உத்தியோகத்தர்களோ வீட்டில் இருக்கவில்லை.

வாகனமொன்றில் வந்த நபர்கள் - வீட்டின்கதவு, ஜன்னல்களை உடைத்துச் சேதமாக்கியதோடு உள்ளே புகுந்து அலுமாரிகளைத் திறந்தும், பெட்டிகளைத் திறந்தும் ஏதோ ஒரு ஆவணத்தைத் தேடி - அதனை எடுத்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய முஸ்லிம் காங்கிரஸில் தற்போது உட்பூசல் ஏற்பட்டுள்ளது.

எச்.எம்.ஹாரிஸ் மீண்டும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு தாவுவதற்கு தன்னைத் தயார்ப்படுத்தி, அது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவருகின்ற நேரத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு காத்தான்குடியில் தேசிய ஐக்கிய முன்னணி பிரதி செயலாளர் நாயகம் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவின் பிரசார கட் அவுட்கள் அனைத்தும் இனந்தெரியாத நபர்களினால் சேதமாக்கப்பட்டுள்ளன.

'மகனே நீ இல்லாத அருமை சுனாமி வந்த பின்புதான் தெரிந்தது' என குடும்பப் பெண்களின் புலம்பலை வெளிப்படுத்தும் வகையில் இந்தக் கட் அவுட்கள் அமைக்கப்பட்டிருந்தன.

கடந்த பொதுத்தேர்தலில் தேசிய ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்த இவர், மீண்டும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்குள் நுழைவதற்குத் தயாராகவுள்ளார்.

அடுத்த பொதுத்தேர்தலை இலக்கு வைத்து பிரசாரத்திலும் தற்போது ஈடுபட்டுவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முப்படைத் தளபதிகளை தேர்தல் ஆணையாளர் சந்திக்கிறார்!

கொழும்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஏற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க - இன்று பொலிஸ் மா அதிபர் மற்றும் முப்படைத் தளபதிகளுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

தேர்தலை நீதியாகவும், நேர்மையாகவும் நடத்தும் வகையில் ஏற்பாடுகளைச் செய்வதற்காகவே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் சட்டங்களை உரிய முறையில் அமுல்படுத்துதல், தேர்தல் தினத்தன்று பொலிஸார் எடுக்கவேண்டிய விசேட நடைமுறைகள் தொடர்பாக இந்தச் சந்திப்பின்போது ஆராயப்படவுள்ளது.

# ஜனாதிபதி சந்திரிகாவுடன் கடற்படைத் தளபதி ஆலோசனை





கொழும்பு

புதிய கடற்படைத் தளபதியாகப் பொறுப்பேற்ற வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொட, கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

ஜனாதிபதி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. புதிய கடற்படைத் தளபதியாக வசந்த கரன்னகொட பதவியேற்றபின் இடம்பெற்ற முதல் உத்தியோகபூர்வ சந்திப்பு இதுவாகும்.

இந்தச் சந்திப்பின்போது கடற்படைத் தளபதியுடன் ஜனாதிபதி பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பு விநியோகத்திற்கு படையினர் தடை!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வெளியாகும் ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) பத்திரிகையை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு விற்பனைக்காக எடுத்துச்செல்வதற்கு விசேட அதிரடிப்படையினர் தடை விதித்துள்ளனர்.

இது தொடர்பாக ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) ஆசிரியர் பீடம் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

கொக்கட்டிச்சோலையிலிருந்து வெளியாகும் ஈழநாதம் பத்திரிகையை படையினர் தமது கட்டுப்பாட்டுப்பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு கடந்த இரண்டு நாட்களாக தடைவிதித்துள்ளனர்.

எமது பணிமனையிலிருந்து வெள்ளிக்கிழமை விநியோகப் பணியாளர்கள் பத்திரிகைகளை எடுத்துச்சென்றபோது, பட்டிருப்பு பாலம் மற்றும் மண்முனை இறங்குதுறை ஆகிய இடங்களிலுள்ள விசேட அதிரடிப் படையினர் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கவில்லை.

கடந்த ஒன்றரை வருடமாக வெளிவரும் இந்தப் பத்திரிகை இலங்கையில் வெளிவரும் பத்திரிகைகள் எவ்வாறு அரச திட்டங்களுக்கு அமைவாக பதிவு செய்யப்பட்டதோ அதே சட்டங்களுக்கு அமைய பதிவுசெய்யப்பட்டது.

இதுவரை நடுநிலைமை தவறாத பத்திரிகை தர்மத்திற்கு ஏற்ப வெளிவரும் ஈழநாதத்தின் விநியோகத்தை படைத்தரப்பு தடை செய்வது என்பது "ஜனநாயக வழிமுறைகளை மீறும் செயல்

இவ்வாறு பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்கள் படைத்தரப்புக்கு எந்த இடத்திலும் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பாக போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் முறையிடப்பட்டுள்ளதுடன் -

மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## இரு இளைஞர்கள் திருமலையில் கைது!

திருகோணமலை

மட்டக்களப்பைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களை சந்தேகத்தின்பேரில் தாம் கைது செய்திருப்பதாக திருகோணமலை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு திருகோணமலை நகரில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட இந்த இளைஞர்கள் - சுந்தரலிங்கம் சுதர்சன் (வயது 18 - பெரிய கல்லாறு), சித்திரவேல் ரமேஸ் (வயது 20) என அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## ஏறாவூரில் குண்டுவீச்சு!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு - ஏறாவூர் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் குண்டுவெடிப்புச்சம்பவமொன்று இடம்பெற்றபோதும்- குறிப்பிடத்தக்க சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் எம்.எச்.எம். அய்னுதீனின் வீட்டிற்கு அருகிலேயே இந்த கைக்குண்டுவீசப்பட்டது.

குண்டுவெடித்துச் சிதறியதில் அருகிலிருந்த வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் சேதமடைந்தன. இந்தச் சம்பவத்துடன் உள்ளூர் ஆயுதக்குழுக்களுக்கு தொடர்புகள் இருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது.

# புலிகளின் நிர்வாகப் பகுதிகளில் அரசியற்துறைச் செயலகங்கள்!

கிளிநொச்சி

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைச் செயலகங்கள் புலிகளின் நிர்வாகப் பகுதிகளில் செயற்படத் தொடங்கியுள்ளன.

நிராயுதபாணிகளாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கடமையாற்றிய அரசியற்துறைப் போராளிகள் மீதான தொடர்படுகொலைகளையடுத்து அந்தப் பிரதேசங்களில் இயங்கிவந்த அரசியற்துறை அலுவலகங்கள் மூடப்பட்டு போராளிகள் மீளப்பெறப்பட்டனர். இந்த நிலையில் அரசியற்துறை அலுவலகங்களை தங்களது நிர்வாகப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் செயற்படுத்தத்தொடங்கியுள்ளனர்.

யாழ்.மாவட்ட அரசியற்துறைச் செயலகம் பளையிலும் - வவுனியா மாவட்ட அரசியற்துறைச் செயலகம் புளியங்குளத்திலும் இயங்கத் தொடங்கியுள்ளன.

# க.பொ.த. சாதாரண வகுப்பில் மூன்று விஞ்ஞான பாடங்கள்!



கொழும்பு

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் பௌதீகம், இரசாயனம் மற்றும் உயிரியல் ஆகிய பாடங்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் தாரா டி மெல் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெறும் சர்வதேச புத்தகக் கண்காட்சியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தனதுரையில் -

இலங்கையில் தேசிய கல்வியை உலக கல்வி அமைப்பு முறைக்கு ஏற்றதாக மேம்படுத்தும் முயற்சியின் ஒரு கட்டமே இதுவாகும். கணிதம், விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் மாணவர்களின் அறிவை விருத்திசெய்வதற்கு புதிய கல்விச் சீர்திருத்தங்களின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கையில் தற்போது 9 ஆயிரத்து 900 பாடசாலைகள் இயங்குகின்றன. இவற்றில் 4 ஆயிரத்து 200 பாடசாலைகளில் மட்டுமே நூலக வசதிகள் உள்ளன. எனவே, பாடசாலை அமைப்பு முறைகளை மாற்றவும் நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கென ஆடம்பர வாகன இறக்குமதிக்கு அனுமதி

கொழும்பு

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 35 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு மேற்படாத பெறுமதிகொண்ட வாகனங்களை இறக்குமதி செய்துகொள்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 225 உறுப்பினர்களுக்கும் இந்த வாகனங்களை இறக்குமதி செய்துகொள்வதற்கான வாய்ப்புக் கிட்டும் எனத் தெரியவருகிறது.

நாடாளுமன்ற விவகார அமைச்சர் விஸ்வ வர்ணபாலவால் இந்த யோசனை அமைச்சரவைக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வஜிர விஜேகுணவர்த்தனவுக்கு பொறுப்பு வழங்க பின்னடிப்பு!

கொழும்பு

கொழும்பு இராணுவக் கட்டளை அதிகாரி பதவியிலிருந்து அண்மையில் நீக்கப்பட்ட மேஜர் ஜெனரல் வஜிர விஜேகுணவர்த்தனவுக்கு வேறு பொறுப்புக்கள் எதுவும் வழங்காமல் அரசாங்கம் இழுத்தடித்து வருவதாகக் கூறப்படுகிறது.

லக்ஷ்மன்கதிர்காமர் கொலைக்குப் பின்னர் - கொழும்பு நகரப் பாதுகாப்பைப் பலப்படுத்தும் செயற்திட்டம் ஒன்றை வகுப்பது தொடர்பாக கூட்டுப் படைத் தளபதி தயா சந்தகிரியுடன் இவர் ஆலோசனை நடத்தியிருந்தார்.

ஆனால், நாடு முழுவதையும் உள்ளடக்கிய பாதுகாப்புத் திட்டமொன்றை உருவாக்கிய மேஜர் ஜெனரல் வஜிர விஜேகுணவர்த்தனாவை அரசு கொழும்பு நகரத் தளபதி பதவியிலிருந்து நீக்கியது.

இதையடுத்து இவர் பனாகொட 11 ஆவது டிவிசன் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்படக்கூடும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளபோதும் - இதுவரை அவருக்கு புதிய பொறுப்பு எதுவும் வழங் கப்படவில்லை. இந்த விடயத்தை அரசே திட்டமிட்டு இழுத்தடித்து வருவதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# அவுஸ்ரேலியா நிதானமாக ஆடினாலும் மழையால் தொடரை இழக்கும் நிலை!

லண்டன் —

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரின் டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்ஸில் அவுஸ்ரேலிய தொடக்க வீரர்கள் லாங்கரும், ஹைடனும் சத மடித்தனர்.

அவுஸ்ரேலிய - இங்கிலாந்து அணிகளிடையேயான 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லண்டனில் உள்ள ஓவல் மைதானத்





தில் நடைபெற்றுவருகிறது. இதன் முதல் இனிங்ஸில் இங்கிலாந்து 373 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தது.

பின்னர் முதல் இனிங்ஸில் ஆடிய அவுஸ்ரேலிய அணி 2ஆவது நாள் ஆட்டநேரமுடிவில் விக்கெட் இழப்பின்றி 112 ஓட்டங்களை எடுத்திருந்தது. லாங்கர் 75 ஓட்டங்களையும், ஹைடன் 32 ஓட்டங்களையும் எடுத்து ஆடிக்கொண்டிருந்தனர்.

இந்தநிலையில் - 3ஆவது நாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் மழை காரணமாக ஆட்டம் அரைமணி நேரம் தாமதமாகத் தொடங்கியது. லாங்கரும், ஹைடனும் தொடர்ந்து ஆடினர்.

இந்த ஜோடி நிலைத்துநின்று ஆடியது. மதிய உணவு இடைவேளை




யின்போது அந்த அணி விக்கெட் இழப்பின்றி 157 ஓட்டங்களை எடுத்திருந்தது. உணவு இடைவேளைக்கு பின்னர் சிறிது நேரத்தில் லாங்கர் சதமடித்தார். 142 பந்துகளைச் சந்தித்த அவர் 10 பவுண்டரிகள், 2 சிக்ஸருடன் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

ஸ்கோர் 185ஐ எட்டியநிலையில் அற்புதமாக ஆடிக்கொண்டிருந்த லாங்கர் 105 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் ஹைடன் 70 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருந்தார். மீண்டும் மழை பெய்ததால், ஆட்டம் தடைப்பட்டது.

மழைக்குப் பின்னர் அவுஸ்ரேலிய அணி தொடர்ந்து ஆடியது. சிறிது நேரத்தில் ஹைடன் சதமடித்தார். அவர் 101 ஓட்டங்களுடனும், பொண்டிங் 20 ஓட்டங்களுடனும் ஆடிக்கொண்டிருந்தபோது மீண்டும் மழை குறுக்கிட்டது. அப்போது அவுஸ்ரேலியாவின் ஸ்கோர் ஒரு விக்கெட் இழப்புக்கு 243 ஆக இருந்தது.


பின்னர் மீண்டும் ஆட்டம் தொடங்கியது. எனினும் 56 பந்துகளில் 3



பவுண்டரிகள் அடங்கலாக 35 ஓட்டங்களைப் பெற்றிருந்த பொண்டிங் ஆட்டமிழந்தார். 2 விக்கெட் இழப்புக்கு 277 என்ற நிலையில் ஸ்கோர் இருந்தபோது வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது.


ஹைடன் 250 பந்துகளில் 15 பவுண்டரிகளுடன் 110 ஓட்டங்களைப் பெற்றநிலையிலும், பின்னர் ஹைடனுடன் இணைந்த மார்ட்டின் 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இரண்டாம் நாள், மூன்றாம் நாள் ஆட்டங்கள் மழையால் பாதிக்கப்பட்ட



தால் - அவுஸ்ரேலிய அணி நிதானமாக ஆடியதால், ஓட்டங்களைக் குவிக்கமுடியாது போனது.

இதனால், இந்தப் போட்டியில் அவுஸ்ரேலியா வெற்றிபெறுவது



கடினமானதாயுள்ளது. அத்துடன் இந்தப் போட்டி சமநிலையில் முடிவடைந்தால் அவுஸ்ரேலிய அணி 18 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆஷஸ் கிண்ணத்தை இழக்க வேண்டியிருக்கும்.

மூன்றாம் நாள் ஆட்டத்தில் லாங்கர் தனது 22ஆவது சதத்தைப் பூர்த்தி செய்ததுடன் 7,000 ஓட்டங்களையும் கடந்தார்.

அதேவேளை, ஹைடன் 21ஆவது சதத்தைப் பூர்த்திசெய்து 6,000 ஓட்டங்களைக் கடந்தார். கடந்த 31 இனிங்ஸ்களில் அவர் அடித்த முதல் சதம் இது வென்பதும் குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு

## பிறேஸில் நாட்டு மரதன் வீரரின் தங்கக் கோரிக்கை நிராகரிப்பு!

லாஸென் —

தங்கப்பதக்கம் கேட்டு வழக்குத் தொடர்ந்த பிறேஸில் ஒலிம்பிக் வீரரின் வழக்கை விளையாட்டு அமைப்பு தள்ளுபடி செய்தது.

ஏதென்ஸ் ஒலிம்பிக் மரதன் ஓட்டப்போட்டியில் பிறேஸில் வீரர் வோன்டர் லீடி லிமா பங்கேற்றார். இந்தப் போட்டியில் முதல் ஆளாக இவர் ஓடிவந்து கொண்டிருந்தார். ஓட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ரசிகர் ஒருவர், திடீரென லிமா மீது பாய்ந்து, அவரின் ஓட்டத்தைத் தடை செய்தார். இதனால் லிமாவின் ஓட்டம் சில நிமிடங்கள் தடைப்பட்டது.

அப்படியும் ஓடி மூன்றாம் இடத்தைப் பிடித்தார் லிமா. பார்வையாளர் மட்டும் தடுத்திராவிட்டால், தங்கப் பதக்கம் கட்டாயம் பெற்றிருக்கமுடியும் என்பதால், பிறேஸில் ஒலிம்பிக் குழு மற்றும் லிமா இருவரும் சர்வதேச விளையாட்டுத்துறை நடுவர் மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். குறைந்த பட்சம் தனக்கும் ஒரு தங்கப் பதக்கம் வழங்கப்படவேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

ஆனால் சுவிஸ் நாட்டின், லாஸென் நகரில் உள்ள சர்வதேச விளையாட்டுத்துறை நடுவர் மன்றம், லிமாவின் கோரிக்கையை நேற்றுமுன்தினம் நிராகரித்தது.

திட்டமிட்ட சதி அல்லது விதிமுறைகளை மீறி நடந்த செயல் என லிமா தரப்பு நிரூபிக்கவில்லையெனக்கூறி, அவரது கோரிக்கையைத் தள்ளுபடி செய்தது.

## பிறையன் சகோதரர்களுக்கு ஆண்கள் இரட்டையர் பட்டம்!

நியூயோர்க் —

நியூயோர்க்கில் நடைபெற்ற அமெரிக்க ஓபன் ரெனிஸ் ஆண்கள் இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் பிறையன் சகோதரர்கள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினர்.

சுவீடனின் பொப் பிறையன் - மைக் பிறையன் ஜோடி, பெலாரஸின் மேர்க்ஸ் - மிர்னாய் ஜோடியை இறுதியாட்டத்தில் வென்று இந்தப் பட்டத்தைக் கைப்பற்றிமை குறிப்பிடத்தக்கது.



## எல்லாளன் கழகம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று

யாழ்ப்பாணம் —

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகத்தின் 14ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ‘அ’ பிரிவில் இரண்டு ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

பிற்பகல் 3.00 மணிக்கு கழகமைதானத்தில் நடைபெறும் முதல் ஆட்டத்தில் கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து செ. மோரிஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

பிற்பகல் 4.15 மணியளவில் நடைபெறும் இரண்டாவது ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

## அமெரிக்க ஓபன் ரெனிஸ்

## பெண்கள் ஒற்றையர் பிரிவில் சம்பியனானார் கிளைஸ்டர்ஸ்




நியூயோர்க் —

நியூயோர்க்கில் நடந்த அமெரிக்க ஓபன் ரெனிஸ் பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் கிம் கிளைஸ்டர்ஸ் சம்பியன் பட்டத்தை வென்றார்.

பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸும் பிரான்ஸின் மேரி பியர்ஸும் இறுதிப் போட்டியில் மோதினர். இதில் 6-3, 6-1 என்ற நேர் செட் கணக்கில் கிம் கிளைஸ்டர்ஸ் வெற்றிபெற்று சம்பியன் பட்டம் பெற்றார்.


அதேவேளை, ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டிக்கு ஆந்த்ரே அகாஷி தகுதிபெற்றார்.

ஆண்கள் ஒற்றையர் அரையிறுதிப் போட்டிகளில் முதல் ஆட்டத்தில் அமெரிக்க வீரர்கள் ஆந்த்ரே அகாஷியுடன் ஜெனிப்ரி மோதினார். அனுபவ வீரரான அகாஷிக்கு சரிக்குச் சரி சவால் கொடுத்தார் இளம் வீரர் ஜெனிப்ரி. முதல் செட்டை 6-4 என்ற அடிப்படையில் கைப்பற்றினார் அகாஷி. இரண்டாம் செட்டை ஜெனிப்ரி 7-5 என்ற முன்னிலையில்



வசப்படுத்தினார்.

மூன்றாம் செட்டை அகாஷி 6-3 என்ற அடிப்படையில் சுலபமாக வென்றார். பதிலுக்கு ஜெனிப்ரி 6-4 என்று நான்காம் செட்டைக் கைப்பற்ற, போட்டி ரசிகர்களிடையே விறுவிறுப்பை ஏற்படுத்தியது.



கடைசி செட்டை அகாஷி 6-3 என்ற முன்னிலையில் கைப்பற்ற, சுமார் மூன்று மணிநேரம் நீடித்த விறுவிறுப்பான போட்டி முடிவுக்கு வந்தது. அரங்கிலிருந்த மனைவி ஸ்டெபிகிராப், குழந்தைகளின் ஆரவாரத்துடன், யு.எஸ். ஓபன் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார் ஆந்த்ரே அகாஷி.

கடந்த 1994 மற்றும் 1999ஆம் ஆண்டுகளில் பட்டம் வென்றவர் அகாஷி என்பது குறிப்பிடத்தக்கது. மற்றொரு அரையிறுதிப் போட்டியில் சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரரும், அவுஸ்ரேலியாவின் லெய்டன் ஹெவிட்டும் மோதினர். இதில் ரோஜர் பெடரர் 6-3, 7-6, 4-6, 6-3 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்றார்.

## சிம்பாப்வே பயிற்சி ஆட்டத்தில் 3 இந்திய வீரர்கள் சதமடித்தனர்



முடாரே —

இந்திய அணிக்கும் சிம்பாப்வே கிரிக்கெட் சபை லெவன் அணிக்குமிடையிலான மூன்றுநாள் பயிற்சி ஆட்டத்தில் - மூன்று இந்திய அணி வீரர்கள் சதமடித்தனர்.


முடாரே நகரில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இந்தப் போட்டியில் முதலில் சிம்பாப்வே கிரிக்கெட் சபை லெவன் அணி துடுப்பெடுத்தாடியது.

9 விக்கெட் இழப்புக்கு 294 ஓட்டங்களைப் பெற்றநிலையில் - சிம்பாப்வே கிரிக்கெட் சபை லெவன் அணி முதல் இனிங்ஸ் ஆட்டத்தை டிக்ளேர் செய்வதாக அறிவித்தது. இதன் பின்னர், இந்திய அணி முதல் இனிங்ஸில் ஆடியது.

இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி 2 விக்கெட் இழப்புக்கு 365 ஓட்டங்களைப் பெற்றிருந்தது: பின்னர் மூன்றாவதும் இறுதியுமான நேற்றுமுன்தினம் இந்திய அணி தொடர்ந்து ஆடி 9 விக்கெட் இழப்புக்கு 572 ஓட்டங்கள் என்ற ஸ்கோருடன் ஆட்டத்தை டிக்ளேர் செய்தது.

இதில் காம்பீர் 126, ஷேவாக் 123, ராவிட் ஆட்டமிழக்காமல் 108, கும்ளே 61, கங்கூலி 46, தினேஷ் கார்த்திக் 40 ஓட்டங்களை எடுத்தனர்.

பின்னர் இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே கிரிக்



கெட் சபை லெவன் அணி ஆட்டநேர முடிவில் 1 விக்கெட் இழப்புக்கு 96 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதனால் இந்த மூன்று நாள் பயிற்சி ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிந்தது.

# சுயமாக ஆக்கங்கள் படைப்போர் அருகிக் கொண்டே செல்கின்றனர்!

## வாசிப்புப் பழக்கம் குறைவே காரணமாம் - கணேசதாஸன்

உடுவில் —

கடந்தகாலங்களில் பாடசாலைகளில் மாணவர்கள் தாமாகவே புத்தங்களை வாசிப்பதிலும் விடைகளைக் கண்டுபிடிப்பதிலும், பரீட்சைகள், கட்டுரைப் போட்டிகளில் பங்கு கொள்வதிலும் மிகுந்த ஈடுபாடு காட்டினர்.

ஆனால், காலம் மாறமாற இன்று சுயமாக கட்டுரை, கவிதை, கதைகள் எழுதுவதில் ஈடுபாடு குறைந்துள்ளது. அதனால் இன்று சுய முயற்சியில் புத்தகங்களை வாசித்து எழுதும் எழுத்தாளர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. என சமூகஜோதி கணேசதாஸன் தெரிவித்தார்.

சர்வதேச எழுத்தறிவுத் தினத்தை முன்னிட்டு உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் நடைபெற்ற எழுத்தறிவூட்டல் நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

மாணவர்களின் எழுத்தாற்றலை ஊக்குவிக்க பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

உறுப்பெழுத்து மற்றும் மொழி அறிவு பயிற்சிகளை பாலர் வகுப்பிலிருந்தே உரிய முறையில் வழங்கி வந்தால் எழுத்தாற்றலை இலகுவாக வளர்த்துக் கொள்ளமுடியும்.

எழுத்தறிவில் பின்தங்கியுள்ள மாணவர்களை இனம்கண்டு அவர்களுக்கான பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் ஆசிரியர்களின் தெய்வீகப் பணியாகும். எழுத்தறிவித்தவர்கள் தெய்வமாக போற்றப்பட வேண்டும் எனக் கூறினார்.

பாடசாலை அதிபர் ந.சிவகடாச்சம் பேசுகையில்-

கணினியுக வாழ்க்கைக்கு எழுத்தாற்றல் மிக முக்கியம் என்றார். எழுத்தாக்கப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.(101)

### தீவக வலையத்தில்

## பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களின் கவனத்துக்கு

தீவகம் —

தீவக கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த சாதாரணம், உயர்தரப் பரீட்சைகளில் தோற்றி சித்தியடையாது பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான தொழில் நுட்பம் தொடர்பான தகவல்களைப் பெறவும், ஆளுமை விருத்தியை மேம்படுத்துவதற்கான தொழில்சார் பயிற்சியையும், அது தொடர்பான தொழில் சார் வல்லுனர்களின் உதவியுடன் கூடிய வழிகாட்டலை பெறவும் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்து வழங்க மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தீவக கல்வித் திணைக்களம் முன்வந்துள்ளது.

எனவே, தாங்கள் இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அதிபர்களுடன் உடனடியாக 26.09.2005 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொண்டு உங்கள் சுயவிபரத்தைச் சமர்ப்பித்து உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

இந்த இலவசப் பயிற்சி பற்றிய நிலையம் உரிய காலத்தில் அதிபர்கள், பத்திரிகைகள் ஊடாக அறிவிக்கப்படுமென தீவக வலய கல்விப் பணிப்பாளர் அறிவித்தார்.

# நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் நாளை முதல் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு!

மானிப்பாய் —

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பின்வரும் பகுதிகளில் நாளை தொடக்கம் எதிர்வரும் 18 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் - கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களைப் பிடித்து அழிக்கும் பணி துரிதமாக நடைபெறவுள்ளதாக நல்லூர் பிரதேசசபையின் பொதுச் சுகாதாரப் பிரிசோதகர் வி.தயாமோகன் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் -

நாய்க்கடிக்கு இலக்காகி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும், எனவே கட்டாக்காலி நாய்களை அழிக்க வேண்டிய தேவை எழுந்துள்ள நிலையில் - உள்ளூராட்சி வாரத்தில் கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே, இந்தத் தினங்களில் பொது மக்களதும், சனசமூக நிலையங்கள் மற்றும் கிராமிய அபிவிருத்திச் சங்கங்களினதும் ஒத்துழைப்பு இந்தப் பணிக்கு மிகவும் அவசியம் . அப்போது தான் சரியான முறையில் இந்தச் செயற்பாட்டை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார் .

எனவே, இந்தக் காலப்பகுதியில் பொது மக்கள் தமது வளர்ப்பு நாய்களை வீட்டில் கட்டி வைக்குமாறும் வீதிகள், ஒழுங்கைளில் அனுமதிப்பத்திரம் இன்றித் திரியும் எந்த நாயும் கட்டாக்காலிகளாகக் கருதப்பட்டு, நஞ்சூட்டி அழிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்படும் இடங்கள் வருமாறு -

இன்று காலை 9 மணி தொடக்கம் கோண்டாவிலில் பலாலி வீதி சந்திப்பகுதி, அண்ணங்கை வீதி, மத்திய மருந்தக வீதி, நாராயணர் கோவில்வீதி, புகையிரத நிலைய வீதி, சந்தைவீதி, பாடசாலை வீதி ஆகிய பகுதிகளிலும்.

நாளை காலை 9 மணி தொடக்கம் திருநெல்வேலி சந்தைச் சுற்றாடல் - அம்மன் வீதி, இராமலிங்கம் வீதி, பாற்பண்ணை வீதி, பலாலி வீதி, தாளையடி ஒழுங்கையிலும்.

எதிர்வரும் புதன் கிழமை 9 மணி தொடக்கம் கொக்குவில் கிழக்கு நந்தாவில் வீதி, பொற்பதி வீதி, சம்பியன் ஒழுங்கை, மருத்துவபீடச் சுற்றாடல், கொக்குவில் இந்து மயான வீதி ஆகிய இடங்களிலும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் திருநெல்வேலி கிழக்கு செங்குந்தா வீதி, சட்டநாதர் வீதி, கல்வியங்காடு சந்தி, பருத்தித்துறை வீதியிலும் .

எதிர்வரும் வெள்ளிக் கிழமை கொக்குவில் மேற்கு குளப்பிட்டி வீதி, ஆடியபாத வீதி, பிடாரி அம்மன் கோவிலடி, பொன்னையா லேன், நீதிராச வீதி, மஞ்சவனப்பதி வீதி போன்ற இடங்களிலும் கட்டாக்காலி நாய் அழிக்கும் பணி நடைபெறும் என பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். (100)

### கார்ப் திட்டத்தின் கீழ்

## காக்கைதீவு இந்து மயானம் அருகில் சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவப்படும் !

மானிப்பாய் —

காக்கை தீவு இந்து மயானம் அருகில் 'கார்ப்' திட்டதின்கீழ்பாவனைக் கழிவுகளைச் சுத்திகரிக்கும் இயந்திரம் பொருத்தப்படவுள்ளது.

இதற்கான பூர்வாங்க நடவடிக்கையை நீர் வழங்கல் சுகாதாரத்திட்ட முகாமையாளர் எந்திரி ரி.பாரதிதாசன் மேற்கொண்டுள்ளார்.

வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையும், சண்டிலிப்பாய் பிரதேச செயலகமும் இதற்கான அரச காணியை வழங்க முன்வந்துள்ளன.

இதேவேளை காக்கைதீவில் அமைக்கப்படவுள்ள சுத்திகரிப்பு நிலையத் தொகுதி அமைப்புக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி வழங்கவுள்ளது. இந்த நிலையில் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்படவுள்ள பகுதியை வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளர் எம் ஜே.சாந்தசீலன், யாழ். நீர் வழங்கல் சுகாதார திட்ட முகாமையாளர், பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளர் மற்றும் தொழில் நுட்ப அலுவலர்கள் ஆகியோர் அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டனர். (100)

# ஆசிரியர் கல்வியியலாளர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை!

மானிப்பாய் —

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் 2 ஆம் வகுப்பின் II ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைக்கு கல்வியமைச்சால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தத் தடைதாண்டல் பரீட்சை - பரீட்சை ஆணையாளர் நிலையத்தால் எதிர்வரும் டிசம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய முறையில் தயாரித்து, எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக - பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒருங்கிணைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சகர் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம் பெலவத்த, பந்தரமுல்ல என்ற முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பத்தை வைத்து அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2 - II வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை எனக் குறிப்பிட்டு அனுப்பும்படி கேரப்பட்டுள்ளது.

இதன் மேலதிக விபரங்களை கடந்த 09.09.2005 ஆம் திகதி வெளியான அரச வர்த்தகமாணியில் பார்வையிடலாம். (100)

## சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே ஆக்கப் போட்டிகள்

யாழ்ப்பாணம் —

எதிர்வரும் 21 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு இல 08 குருசோ வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்கு மான நிறுவனம் - எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதிவரையான காலப்பகுதியை சர்வதேச சமாதான வாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்தச் சமாதான வரத்தையொட்டி இந்த நிறுவனத்தால் கட்டுரை, கவிதை, சுவரொட்டி போன்ற ஆக்கப் போட்டிகளும், சமாதானம் சம்பந்தமான கருத்தரங்குளும், சமாதானம் பற்றிய விழிப்புணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்தும் முகமாக பாடசாலைகளில் மாணவர்கள் - கொடி வாரத்தை அனுஷ்டிக்கும் செயற்பாடுகளும், இறுதி நாளான 21 ஆம் திகதி திருமறைக் கலாமன்றத்தில் கலை நிகழ்வுகளும் நடத்தப்படவுள்ளன.

எனவே, அனைத்து மக்களையும் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டு சமாதானத்துக்கான பங்களிப்பை நல்கும்படி நல்லிணக்க சபையினர் அழைத்துள்ள-னர்.

இவை தொடர்பான மேலதிக விபரங்களை 14.09.2005 பத்திரிகைகளில் பார்க்கலாம் என இந்தச் சபையினர் அறிவித்துள்ளனர..

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மாநகர சபையால் செயற்திட்டங்கள்

யாழ்ப்பாணம் —

யாழ். மாநகர சபையால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளவுள்ளதாக மாநகர சபை ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

இன்று முதல் எதிர்வரும் 18 ஆம் திகதிவரை உள்ளூராட்சி வாரமாகப் பிரகடணப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வாரத்தில் மேற்கொள்ளவுள்ள வேலைத் திட்டங்களாக - மாநகரசபையின் சகல எல்லைகளையும் துப்புரவு செய்தல், மாநகர சபையால் மேற்கொள்ளப்படுகின்ற சகல சேவை அலுவலகங்களிலும் பதாதைகள் கட்டுதல்,

மாந கரசபை எல்லைக்குள் அமைந்துள்ள சனசமூக நிலையங்களின் ஒத்துழைப்புடன் சிரமதானம் செய்தல், நடமாடும் சுகாதார சேவைகளாக டெங்கு, மலேரியா தொடர்பான கருத்தரங்குகளை நடத்துதல், பாடசாலை மாணவர்களுக்கு சுகாதாரக் கல்வி வழங்குதல், திண்மக் கழிவு முகாமைத்துவக் கருத்தரங்கு பாடசாலை மாணவர்களுக்கு நடமாடும் நூலக சேவையை ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு பாடசாலைகளிலும் வழங்குதல்,

மாநகர எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் வீதி விபத்துகளை தடுத்தலும், களைதலும் என்ற தலைப்பில் கருத்தரங்குகளை நடததல், அபிவிருத்தி தொடர்பான வேலைகளை மேற்கொள்ளல், குடிநீர் சேவையை வழங்குதல்,

சுப்பிரமணியம் பூங்கா வில் மரநடுகை மேற்கொள்ளல், நன்னீர் சேகரிப்புக் குளங்களை பாதுகாத்தல் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டல், நடமாடும் மருத்துவ சேவையை வழங்குதல், மகளிருக்கான ஒன்று கூடல் நடத்துதல்,

நூலகக் கண்காட்சியை நடத்துதல், சிறந்த உணவகத்தைத் தெரிவு செய்து பரிசில்கள் வழங்குதல், தாய் சேய் நலன் சார்பாகக் கருத்துக்களை வழங்குதல்,

பொலித்தீன் பாவனையில் ஏற்படும் தீமைகளை மக்களுக்குப் போதித்தல் பரிசளிப்பு விழாக்களை நடத்துதல் போன்றவற்றை மேற்கொள்ளவுள்ளதாக மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

## மட்டுவில் வடக்கு மோகனதாஸ் சனசமூக நிலையம் புனரமைப்பு

மட்டுவில் —

மட்டுவில் வடக்கு மோகனதாஸ் சனசமூக நிலையம் - சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஆதரவுடன் புனரமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த கால யுத்த நடவடிக்கையின் போது, முற்றுமுழு தாகத் தரைமட்டமான இந்தச் சனசமூக நிலையக்கட்டடம், பொது மக்களின் பங்களிப்புடனும், சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதி அனுசரணையுடனும் இரண்டு மாடிகள் கொண்டதாக அமைக்கப்பட்டு வருகின்றது. இதன் முதற்தள வேலைகளே தற்பொழுது மேற் கொள்ளப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது. (24)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை நான்கு



பெயர் : சு.சஜிந்தா
முகவரி : மட்டுவில் வடக்கு.

### வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------------

முகவரி : ----------------

பிறந்த ஆண்டு : ----------------

கூப்பன்களும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

---------------------

பெற்றோர் ஒப்பம்





# என்ன தரப்போறியள்...?

சிறுகதை

வருகிறார்கள் என்று, செய்தி வந்ததும் சின்னவர்கள் முதல் பெரியவர்கள் வரை “கூப்பாடு” போட் டார்கள், சந் தோஷம் பொதுவானது, வயது வித்த யாசமின்றி உணர்வுகளை வெளிப் படுத்தமுயலுகின்றனர்.

வீட்டில் ஒரே “பரபரப்பு, ஆரவாரம், சின்னாட்களுக்கு ஏதோ இனம் புரி யாத சந்தோஷம். யார் வருகிறார்கள் என்று நாங்கள் உங்களுக்குச் சொல்ல வில்லை. சொல்கிறேன்... எனது மனை யிவின் சகோதரிகள் இருவரினதும், குடும்பங்களும் பல வருடங்களுக்குப் பின்பு... சொந்த ஊர்... வீட்டுக்கு வரு கிறார்கள். 1995 இல் இடம்பெயர்வோடு வெளிநாடு போனவர்கள்... கால ஓட் டம் அவர்களை இங்கிருந்து அப்பால் “தள்ளிக் கொண்டே” விட்டுவிட்டது,

தொலைபேசியிலும், கடிதங்களி லும்... தொடர்புகளை ஏற்படுத்திக்



சி.கதிர்காமநாதன்

கொண்டு... பேசித்தீர்த்தவர்கள் இன் னும் சில நாட்களில் இங்கு...

தந்தையார் இளவயதில் காலமாக, பதினெட்டு வயதில் தனது, அன்பான அரவணைப்பில், பாதுகாப்பான நிழ லில் அவர்களை வளர்த்தெடுத்து... எல்லா பொறுப்புகளையும் தனது தலை யில், தோளில்போட்டு...

சகோதரிகள் வருகிறார்கள்.

வீட்டை ஒழுங்குபடுத்த வேண்டி யிருந்தது. போட்டது போட்டபடி சின் னாட்கள் ரண்டுபேர் உள்ள வீடு எப்படி யிருக்கும்? உங்களுக்கும் இது பற்றிய அனுபவம் நிச்சயம் ஏற்பட்டிருக்கும்... எப்படித்தான் கூட்டிப் பெருக்கி, துடை த்து வைத்திருந்தாலும்... அந்த “ஒழுங குகள்” எல்லாம் கொஞ்சநேரத்துக்கு மட்டுமே...

சின்னாட்கள் பள்ளியால் வந்தவுடன் வீட்டு ‘ஒழுங்கு, கட்டுப்பாடு எல்லாம் “இலங்கை நாடாளுமன் றம்போல் அமளிதுமளியாக மாறிவிடும்.

மனைவி ‘கத்தி கூப்பாடுபோடுவாள், புலம்புவாள் அவளுக்கு உதவிக்கு வர எந்த “நேச நாடுகள்” அருகில் இருக கின்றன.

“எனக்கென்ன சித்தியாக்கள் வந்து சிரிக்கப்போயினம். அக்காவின்ரை பிள் ளையள் இவ்வளவு குப்பையா வீட்டை வைச்சிருக்கினமெண்டு... அதுவும் இப்ப கட்டின புதுவீட்டை...

உங்களுக்கு ஒரு... விசயத்தை ஆரம பத்திலேயே சொல்லியிருக்க வேண டும். மறந்து போய்விட்டேன். தொல் புரம் டச்சுவீதியில் மடத்துப் பிள்ளை யார் கோவிலுக்கு அருகில்... பழைய வட்டை இடித்து... புதிய வீடு கட்டி இப் போது, ஆறு மாதங்களாகின்றன. சிறு சிறு வேலைகள் இன்னமும் மீதமிருக் கின்றன.

எனது மச்சாள்மார் குடும்பம் முதன் முதலாக “புது வீட்டுக்கு” காலடி எடுத்து வைக்கப் போகிறார்கள்.

இப்படியான சமாதான சூழ்நிலை யில் வீட்டு சூழ்நிலை “தாறுமாறாக” இருந்தால்...

மனைவி மறுபடியும் புலம்பினாள் “நானும் மாய்ந்து மாய்ந்து வேலை செய்து கொண்டிருக்கிறேன்... எப்பதான் ஒழுங் குப்டுத்தி முடிக்கப்போறனோ?

சின்னாட்களுக்கு சிரிப்பு வந்தது, வரும ஆவணிக்கு 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எடுக்கப்போகிறார்கள்.

நாட்கள் நகர வீட்டிலிருந்த அனைவ ரினதும் “புலன்களும்” வாசல் பக்கமே “திருப்பி வைக்கப்பட்டிருந்தன... ஏதா வது வாகனத்தின் “இரைச்சல்” கேட்டால்... எல்லாரும் வாசலை நோக்கி ஓடி வருவார்கள்.

அன்றும் வழமைபோல் வாகன இரைச சல் கேட்க ஓடினார்கள்... ஆனந் தப்பட் டார்கள்.

ஆ... பபி... சுகந்தி

அக்கா... அத்தான்...

சின்னக்குட்டியள்

எப்படி இருக்கிறியள்.

பரபரப்பு, சந்தோஷம், நாடி நரம்பு களில் ஏதோ, உணர்வுகள், ஒருவரை ஒருவர் இறுகத் தழுவிக் கொண்டார் கள்...

மைத்துனிமாரின் குழந்தைகள் ‘‘புஷ்டியாக புரியாத புதிய சூழ்நிலையில்... அவர்களுடைய கணவன்மாரும் சிரித்தபடி நின றார்கள்.

“அக்கா நலலா மெலிஞ்சு போய் இருக்கிறியள்.

“நீங்கள் ரண்டு பேரும்... நல்லா நிறத்து, ஊதிப் போனி யள்.

“நீங்களும்... போட்டோவில பாத்ததை விட மச்சாள்மாரும் “நல்லா சிவத்துப் போயிருக்கினம்.

‘‘மச்சாள்மாரின் பிள்ளையளைத் தூக்க’’ அவர்கள் பின்வாங்கினார்கள்.

“பெரியம்மாட்டப் போங்கோ.

“அங்க உங்களட அக்கா, அண்ணை யோட விளையாடுங்கோ.

என்னுடைய மச்சாள், மச்சான் உறவு பற்றிக் கொஞ்சம் உங்களுக்குச் சொல்ல வேணும். எனக்கு கலியாணமான கை யோடு, மச்சாள்மார் இருவரும் வெளி நாடு போய்விட்டார்கள். மச்சான்மாரோடு எனக்கு முன்பு தொடர்பு இருக்கவில்லை.

இனிமேல்தான் “உறவினை வலுப் படுத்தவேணும்.

எல்லாம் சில நாட்களுக்குள் இயல்பு நிலைக்கு வந்துவிட்டன. வாய்க்கு ருசி யான விதம் விதமான சாப்பாடுகள்... உற்றார், உறவினர், நண்பர்கள் படை யெடுப்பு.

வீடு பரபரப்பாக இயங்கிக்கொண டிருந்தது. நானும் வேலைக்குப் போய்க் கொண்டு தேவையான போது “விடு முறை”யும் எடுத்துக்கொண்டு...

அன்று இரவு சாப்பாடு முடிந்தகை யோடு கடைசி மச்சான் கேட்டார்.

“நாங்கள் எல்லாரும் ஒருக்கா “மினி ரூர்”ஒன்று போட்டுவந்தால் என்ன... சின் னாட்களுக்கும் சந்தோஷமாக இருக்கும்.

எல்லோரும் அதை விரும்புவது தெரந்தது. “நானும்” உந்துப் “பிளானை” நல்ல தென்று, நினைக்கிறன். சின்ன வானைப் பிடிச்சா... போதும்.

“காலேல போய்... பின்னேரம் வந் திடலாம்.

‘ரூர்’ விசயத்தால் சின்னாட்கள் எல் லோரும் சந்தோஷப்பட்டார்கள். மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

‘ஹாய் - நாங்கள்... ரூர் போறம்.

பெரியப்பா... பெரியம்மா... சித்தியாக் கள் எல்லாரும் போவம் சரி... அடுத்த கேள்வி. எங்கே போவது? “இங்க போற இடமெண்டால்... எல்லாம் முந்தி நாங்கள் போன இடம்தான்... சாட்டி மாதாகோயில், செல்வச்சந்நிதி, நயினாதீவு, கசூரினா பீச்...

“காலேல... போய் பின்னேரம் வாற மாதிரி...

‘‘நாங்கள் கடற்கரை பக்கமாய் போறதுதான் நல்லது... நல்லாக் காத்து வாங்கலாம்.

“ஓமக்கா... கடற்கரை பக்க மாய் போவம்.

“உந்த வெக்கையில் கடற்கரை காத்து நல்லாயிருக்கும்.

“அப்ப... இப்பிடிச் செய்வம். சந்நிதி முருகனுக்குப் போய்... ஆத்தில குளிச் சிட்டு... மடத்தில சாப்பிட்டிட்டு... அப்படியே கடற்கரைப் பக்கமாய் திரும்பி வருவம்.

எல்லோரும் “ஆமோக ஆதரவு”

வாடகைக்கு வான் பிடித்தோம்... வழி யில் பசி ஆற குளிர்பானங்கள், தின்பண் டங்கள் எடுத்துக்கொண்டோம். மச்சான் மார் கையில் காமரா வேறு,

பயணம் இனிதாக புறப்பட்டது. வல் லைப்பாலம் திருத்தப்பட்டுக் கொண்டிருந தது. மனதில் பழைய சம்பவங்கள் பல ஓடி மறைந்தது. துரத்தே சிறு கடல், அதற்கு அப்பால் பனை மரங்கள், பறந்து செல்லும் பறவைகள்.

ஆற்றில் குளித்து, முருகனைக் கும்பிட்டு சற்றுநேரம் கோயில் பிரகாரத் தில் அமர்ந்து... கதைத்து... காற்றை வாங்கி... மடத்தில்... பசியடங்க... சாப்பி ட்டு... மறுபடி கோயில் வந்து... கச்சான் வாங்கி... உடைத்து... கொறித்து... கும் பல், கும்பலாக சனங்கள் வந்து, போய்க் கொண்டிருந்தார்கள்.

நேரம் ஓடியது.

நாங்கள் ஏற்கனவே தீர் மானித்தபடி... கடற்கரை பக்கமாக திரும்பிக்கொண் டிருந்தோம். மிகவும் இயல்பான வேகத் தில்

அய்யா... கடற்கரை...பெரீய்ய கடல்.

உடைந்த கட்டடங்கள்... பியித்து, எறியப்பட்ட வீடுகள்... தொறுங்கிப் போய்... தூரத்தில் வீசப்பட்டிருந்தன. படகுகள்... எல்லாம் மணல் குவியலாக...

“உது... சுனாமி செய்த வேலை.

எல்லோரும் மௌனமாகிவிட்டார்கள். பத்திரிகையில் படித்தது, கேட்டது ஞாப கத்தில் வந்தன.

100 அடி மேலே... கறுப்பாய்

“அத்தான்... உந்த ஒழுங்கைப் பகக மாய் கொஞ்சம்... நிண்டுபோவம்... சின் னாட்களும் கடலைப் பார்க்கட்டும்.

வான் ஒழுங்கையில் நிறுத்தப்பட்டது. தூரத்தில்... இரைந்துகொண்டிருக்கும் கடல். நாங்கள் வெளியே இறங்கத் தொடங்க பெரியவர்கள், குழந்தைகள் எனப்பலர் புழுதியைக் கிளப்பியபடி ஓடி வருவது, தெரிந்தது. வளர்ப்பு நாய்களும் குரைத்தபடி அவர்களோடு சேர்ந்து, ஓடி வந்தன. வானை சூழ்ந்தனர்.

“ஐயா... பொழுதுபட்டநேரம் வாறியள்.

“ஐயா... எங்கட முகாமில... சரியா ஒண்டும் தாரேல்லை...

“நீங்கள்... வந்திருக்கிறியள்... எங் களை சரியாய்க் கவனிக்கவேணும்.

“நீங்கள்... எந்த நிறுவனத்திலிருந்து வாறியள்?

அந்தரம்... எதிர்பார்ப்பு, அவசரம்... கண்களில் தவிப்பு,... வானை சூழ நின்றவர்கள் நோட்டம் பார்த்தார்கள், குழந் தைகள் வானை சுற்றி வந்தார்கள். ஜன் னல் ஊடாக தலையை உள்ளே விட்டுப் பார்த்தார்கள். டிக்கியைத் தட்டினார் கள். “ஐயா... நாங்கள்... சும்மா... ரூர் வந்த னாங்கள்... எந்த நிறுவனமும் அல்ல.

‘‘அட... நீங்கள்... ரூர்... வந்த ஆக்களே. நிறுவனமில்லையே...

“டேய் ஓடுங்கோ அங்கால ஒரு நடை யில் தளர்ச்சி தெரிந்தது. ★

## விமர்சனமும் விமர்சகர்களும்...

இன்றைய ஈழத்தின் கலை - இலக் கியத் தளத்தில் விமர்சனம் தொடர்பான பல்வேறு கருத்து வெளிப்பாடுகள் பல் வேறு கோணங்களில் வெளிப்பட்டு வரு வதைக் காணமுடிகிறது. அரசியல் விடு தலை சார்ந்த போராட்ட முனைப்புகள் ஒருபுறம் வீச்சுப்பெற்றுவரும் அதே வேளை - உலக மயமாதலின் உள்வாங்க ளோடு சுயத்தைப் பற்றிய உணர்வுகள் சுருங்கி மாயைக்குள் மயங்கிச் செல்லும் பண்பாட்டு அவலமும் தமிழர்களிடத் தில் பாரிய தொற்றுநோயாக உள்ள சூழ லில் விமர்சனத்தின் பரந்த செயற்பாடு வீச்சுப்பெறவேண்டும் என்ற யதார்த்தம் அனைவராலும் உணரப்பட்டு வருகிறது.

சமூக அசைவியக்கத்தின் ஆரோக்கி யக் குறிகாட்டிகளில் ஒன்றாக விமர் சனத்தைக் கொள்ளமுடியும். சமுதாய வளர்ச்சியின் அனைத்துக்கட்டங்களி லும் விமர்சனம் பிரதான சக்தியாக இயங்கவல்லதாகும். ஆனால் இன்றைய ஈழத்தின் விமர்சனமானது காத்திரமான தாக இல்லை என்பதைக் கசப்புடன் ஒத் துக்கொண்டே ஆகவேண்டும். யுத்தத் தின் பாதிப்புகள் சாதாரண மக்களின் வாழ்வியலை பல்வேறு வழிகளில் தாக்க மடையச் செய்துள்ள சூழலில் சமுதாய விமர்சனம் கணிசமான பாதிப்பை எதிர் நோக்கியுள்ளது. இதனால் தனிமனித, குழு சார்ந்த செயற்பாடுகளின் வளர்ச்சி யில் இது பாரிய பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

இன்றைய கலை இலக்கியத் தளத்தில் விமர்சனம் தன் அடிப்படை முகவரி யைத் தொலைத்துவிட்டு முதுகு சொறி யும் பாணியில் பாராட்டி வாழ்த்துவதும் சிலவேளைகளில் காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்துவதுமாக தொடர்கிறது. பேராசிரியர் கைலாசபதி அவர்கள் வாழ் ந்த காலத்தில் இலக்கிய விமர்சனமானது படைப்பாளிகளுக்கான அங்கீகாரத் தைப் பெற்றுத்தரும் அளவுக்குச் செயற் பட்டது. அந்தக் காலத்தில் காத்திரமான கருத்தூட்டல்களும், புதிய கோட்பாடு களும்கூட முன்வைக்கப்பட்டன. படைப் பைப் படைப்பால் எதிர்கொள்ளட்டும். படைப்பில் மலடர்களாக உள்ளவர்கள் விமர்சனம் செய்கின்றனர் போன்ற எதிர் நிலைக் கருத்துகளும்கூட அப்போது வெளிப்பட்டன.

உண்மையில் படைப்பில் உள்ள விட யத்தை விமர்சனத்துக்கு உட்படுத்தும் போது அதில் யாதேனும் மாற்றுக்கருத்து விமர்சகனால் முன்வைக்கப்படும்போது விமர்சகன் படைப்பாளியை மிஞ்சிவிட் டான் என்று பொருளாகாது. மேலும் விமர்சகன் தான் ஏற்கனவே வரித்துக் கொண்ட கோட்பாட்டை முன்னிறுத்தி வெளிவரும் படைப்புகள் அனைத்தை யும் விமர்சனத்துக்கு உட்படுத்துவதும் ஆபத்தானது. படைப்பைப் பிரசவிக்கும் படைப்பாளியும் தன் கருப்பொருள் தொடர்பான விமர்சனப் பார்வையி னூடாகவே படைப்பை வெளிப்படுத்த கின்றான். உண்மையில் படைப்பின் பொருள் நிலையின் முதலாவது விமர் சனம் படைப்பாளியாலேயே மேற்கொள் ளப்படுகிறது. ஆனால் இன்றைய இலக் கிய யதார்த்தம் இதற்கு அப்பால் வறு மைப்பட்டு உள்ளதே வேதனைக்குரிய தாகும்.

இன்று நடைபெறும் பெரும்பாலான கலை - இலக்கிய ஒன்றுகூடல்கள் பார தியாரின் இறுதி ஊர்வலத்தை நினைவு படுத்தும் வகையில் அமைவது கலை - இலக்கியத்தின் ஆரோக்கியத்தை விளக் கிக்கொள்ளப் போதுமானதாகும். படைப் பார்வமும், படிப்பார்வமும் பாதிக்கப் பட்டுச்செல்லும் சூழலில் அதனைக் கட்டியெழுப்ப காத்திரமான விமர்சன செயற்பாடு அனைத்து மட்டத்திலும் விரை வுபடுத்தவேண்டியது அவசியமாகும்.

கல்வித்தளத்தில் இளைய தலைமுறை யினர் மத்தியில் வாசிப்பார்வத்தைத் தூண் டல், பொது அமைப்புகள் கருத்தமர்வு களை ஒழுங்குசெய்தல், பண்பாட்டு விழிப் புணர்பை ஊட்டல் என்பவற்றோடு கலை இலக்கிய ரீதியாக படைப்பின் உண்மையை உள்வாங்கி காய்தல், உவத் தல் இன்றி வாசகர்களுக்கு ஒரு வகையில் வழிகாட்டியாக ‘தெளிந்த தரிசனத்தை’ விமர்சகன் வெளிப்படுத்தும்போதே சமுதாய மறுமலர்ச்சி ஏற்படமுடியும் என் பதோடு ஈழத்தமிழ் இலக்கியத்தின் தனித் தன்மையைப் பேணிக் கொள்ளவும் வழி பிறக்கும் என்பதே உண்மை.

- நவிறி புலரி -

# நூல் அகம்



நூல்:-
பச்சை வயல் கனவு
நாவல்
வெளியீடு:-
சுப்ரம் பிரசுராலயம்
77, குமரபுரம் -
பரந்தன்
ஆசிரியர்:-
தாமரைச் செல்வி
விலை:- 250/=

தலைமுறைகளின் கதைகளைக் கூறும் பல நாவல்கள் - தமிழிலும், ஆங்கிலத்திலும் ஏனைய பிற மொழிகளிலும் வந்திருக்கின்றன. அவற்றின் மெய்யான இலக்கு பரம்பரைகளின் கதைகளைக் கூறுவதன் ஊடாக, ஒரு மனித சமுதாயத்தினதும், அது சார்ந்த மண்ணினதும் வளர்ச்சிப் போக்குகளைக் குறிப்பிட்டகால எல்லையில் சித்தரிப்பதுதான். கட்டம் கட்டமான படிமுறை மாற்றங்களை அவை பதிவு செய்கின்றன. புறஉலகு, சூழல், வாழ்நிலை, விழுமியங்கள் என்ற இன்னோரன்னவற்றையும் உள்வாங்குவதென்பது இயல்பானதே என்பதால், அவை அந்தக் குறிப்பிட்ட காலவரலாற்றின் பன்முகப்பாங்கினை இலக்கியமாக்கும் பணியை ஆற்றுகின்றன.

தாமரைச் செல்வியின் **பச்சை வயல் கனவு** நாவலும் - சிவம் என்கிற ஒரு மனிதரின் கதையைக் கூறுவதாகத் தோற்றங்காட்டினாலும் - உண்மையில் நான்கு தலைமுறைகளின் வாழ்நிலைமைகளையும் அவற்றினூடாக பரந்தன் - கிளிநொச்சி பிரதேசத்தின் அரை நூற்றாண்டு கால வரலாற்றையும் விபரிக்கிறது. ஒரு பிரதேசம். குடியேற்றங்களைத் தொடர்ந்து எப்படி ஒரு வளங்கொழிக்கும் வயல் நிலமாக மாறி வளர்ந்து ஊராகி, பட்டினமாகிற்று என்பதையும், போரின் கொடுமையால் அது எவ்வாறு மிதியுண்டு அழிய நேர்ந்ததென்பதையும், அதன் பின்பும் அம்மண் எவ்வாறு புத்துயிர் கொண்டு வீரியத்துடன் முளைவிட முனைகிறதென்பதையும் கூறுகிற சரித்திரம் இது.

தென்மராட்சியிலிருந்து பரந்தனுக்கு வந்து குடியேறுகிற சிவம்தான் கதை நகர்வின் சரடு. அவரின் உழைப்பு முயற்சி எழுச்சி என்பன அவ்ர் காலூன்றிய மண்ணின் குறியீடுகளாகவும் அமைகின்றன. மண்ணும், மக்களும் பின்னிப் பிணைந்தவர்கள் பரஸ்பரம் வளரச்செய்து, வளர்கிறவர்கள். பரந்தன் - கிளிநொச்சியும் சிவமும் அவர் சந்ததிகளும் அவ்வாறே. மரத்துக்கு மட்டுமன்றி, மனிதனுக்கும் வேர்விட மண்தான் தேவை. சிவத்தின் வேர் பரந்தன் மண்ணிலும் பரந்தது. போர் என்ற பிரளயத்தாலும், அறுத்துவிடவியலாத வேர்ப்பிணைப்பு அது. பகையும் போரும் என்கிற காட்டுத்தீ அணைந்த பின் அந்த வேர் மீண்டும் துளிர்த்துவிடுகிறது.

மூன்று பாகங்கள், 34 அத்தியாயங்கள், 303 பக்கங்களில் கதை விரிகிறது. காடுவெட்டும் பச்சிலை மணம், சூடடிக்கும் புதுவைக்கோல் மணம், ஆனையிறவு ஏரியின் உப்புக்காற்று, சோடாத் தொழிற்சாலையின் வாயுக்கள் எல்லாவற்றையும் முகர்ந்த வாசகனை, வெடிமருந்தின் கந்தக மணத்தாலும் திணறடிக்க வைக்கிறது கதை. கதையா காலமா? என்றாலும் எல்லாமும் அங்கே முடிந்து விடவில்லை என்பதுதான் முக்கியமானது.

ஆசிரியைக்கு இவ்வளவற்றையும் உயிரோட்டத்துடன் இயல்பாகச் சொல்ல முடிந்தமை ஒன்றும் ஆச்சரியமானதன்று. அவரின் எழுத்தாற்றலும். அம்மண்ணுடனான அவரது பௌதீக மற்றும் உணர்வு ரீதியான தொடர்ந்த உறுதியான பிணைப்பும் அவரது பலங்கள்.

முப்பது வயதைத் தாண்டிய யாருக்கும் பழைய நினைவுகளைக் கிளறச்செய்யும் சித்தரிப்புக்கள், இளைய தலைமுறைவாசகர்கட்டு இலக்கிய அனுபவத்துடன் தகவல் களஞ்சியமாகவும் அமைந்துவிடுகின்றன.

நாவலைப் படித்து முடித்து விட்டு வைக்கையில் இந்த மண்ணின் கதையை ஆசிரியை இன்னுஞ் சற்று விரிவாகச் சொல்லியிருக்கலாமா, கொஞ்சம் அவசரமாக நகர்கிறாரா என்ற ஆதங்கம் ஒரு வாசகனுள் பிறந்தால் அதில் தவறில்லை. ஒரு விதத்தில் அது கூட ஆசிரியையின் வெற்றி தான்.

**- சாந்தன் -**



## "எஸ்.பொ"வின் கீதைக்கதைகள் - 02

# சோறு

அரசடிப் பிள் ளையாருக்கு அன்று பென்னம்பெரியதொரு படையல். பல்லா யிரக் கணக்கான மோதகங்கள்; கொழுக்கட் டை கள்! பல நூற்றுக்கணக் கானவடை மாலைகள்! பல அண் டாக்கள் நிறைய அவல் - கடலை முதலியன! தேங்காய்கள் மலை மலையாகக் குவிந்து கிடந்தன!



பூஜையை நடத்திப் பக்தர் களுக்குப் பிரசாதம் வழங்க இரு கைகளும் போத வில்லையே என்ற அவதி குருக்களுக்கு!

இந்தத் தடல் புடலுக் குக் காரணம், பல்கலைக்கழகப் பரீட்சைகளின் பெறுபேறுகள் அன்றுதான் வெளியாகியிருந்தன.

பிள்ளையாருடைய அருட் சுரப்பிலே நம்பிக்கை பூண்டு நேர்ச்சை வைத்தார்கள், நன்றி நவில நள்ளும் போட்டியினால் ஏற்பட்டவினை!

அந்தப் பிரமாண்டமான படையல்களைப் பார்த்தபடி நின்றான் ஒரு சிறுவன்.

பக்திக்கும், வேதனை உந் திய பிரிவுக்குமிடையில் அவன் மனம் ஊசலாடிற்று.

யோசனைகள் பல அவனுடைய பிஞ்சு மனதைப் பிறாண்டலாயின.

அவனுடைய பக்குவத்துக்கு ஏற்ற யோசனை ஒன்று மனதிலே பிரகாசித்தது.

அதன் செயற்படுத்தலாக அவன் தன் வீடு சென்று திரும்பி, தன்னுடைய காணிக்கைப் பொருட்களைப் பிள்ளையாருக்கு முன்னாற் படைத்தான்.

இதனை அவதானித்த குருக்கள், 'என்னடா அது?.' எனச் சிறுவனை அதட்டினார்.

'நம்ம பிள்ளையாருக்கு இஞ்சி படைத்திருக்கிறேன்...' என்றான் சிறுவன் பயபக்தியுடன்.

'பிள்ளையாருக்கு இஞ்சி படைக்கலாமென்று யாரடா சொல்லித்தந்தது?.' என்று குருக்கள் 'பாய்'ந்தார்.

குழுமிநின்ற பக்தர்கள் சிறுவனைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தார்கள்.

அவமான உணர்ச்சிமேகங்கள் சிறுவனின் உள்ளத்திற் கவியலாயின.

குரல் கேவலில் நசிவுற, 'நீங்கள் படைத்திருப்பது முழுவதையும், பிள்ளையார் சாப்பிட்டால் அஜீரணக் கோளாறு ஏற்படாதா? பாவம், அவரை நாம் இப்படிக் கஷ்டப்படுத்துதல் முறையா? எனக்கு வயிற்றுக் கோளாறு வந்தால், அம்மா இஞ்சிதான் தருவாள்...' என்றான்.

அவனுடைய விளக்கத்தைக்கேட்ட எல்லோரும் 'கொல்' என்று சிரித்தார்கள்!

'படைக்கப்பட்ட பொருளின் தன்மையைப் பொறுத்தல்ல, படைக்கப்பட்ட பாவனையைப் பொறுத்துத் தான் ஆண்டவன் அவற்றை ஏற்றுக்கொள்ளுகின்றான்...' என்று பிள்ளையார் சொல்ல உன்னியபோதிலும், கல்லுப் பிள்ளையாராக அரச மரத்தின்கீழ்க் குந்தியிருப்பதில் அவர் இன்பங் கண்டார்!

# நேர்

அந்த மக்காச்சோளத்துக்குத் தன் உருவம் கோரமானது என்ற மனக்குறை நெஞ்சு முட்டி வழிந்தது. பாலாடையிலே கடைந்தெடுக்கப்பட்டதைப் போன்று கவர்ச்சிப் பொலிவு காட்டும் மல்லிகைப் பூவைப் பார்த்துப் பெருமூச்சு விட்டது.

'இறைவன் ஓரவஞ்சகன். சிலவற்றுக்கு சுந்தரஞ் சிந்தும் போக வடிவத்தையும், என்னைப்போன்ற சிலவற்றுக்கு கோர வடிவத்தையும் வைத்திருக்கிறான்...' இந்த நினைவில் அதன் மனம் புழுங்கிச் சாம்பியது.

சோளத்தின் மனக்குறையை ஈசன் அறிந்தான். அதன் மாயையைப் போக்கும் கருணை அவன் உள்ளத்தில் சுரந்தது.

'சோளமே! நீ இவ்வாறு கவலுறுதல் முறைகேடானது. வடிவங்கள் அவையவற்றின் யோகத்தைப் பொறுத்தன. போக வடிவமும் என்னுடையவையே. எந்த வடிவத்திலும் நானேயான அம்சமும் கலந்து கிடக்கின்றது. அந்த அம்சம் ஒன்றிலே கூடியும், ஒன்றிலே குறைந்தும் காணப்படுகிறது என்பது மனப்பிராந்தியாகும்...' என்றான் ஈசன்.

'ஈசனே! நீ சாமர்த்தியமாகப் புளுகுகின்றாய். மல்லிகைப் பூவுக்கும் எனக்கும் ஒரே அம்சம் இருக்கிறதா?' எனச் சோளம் அவலக்குரலில் சினந்தது.

'ஏன் இல்லை? எல்லாம் என் வடிவங்களே என்று பாவனை செய்துகொள்வதற்குப் பக்குவ முதிர்ச்சி தேவை...'

'பாவனை, பக்குவம் ஆகிய தத்துவக் கிளவிகளின் அர்த்தங்களை நான் அறியமாட்டேன்...'

ஈசன் முறுவல் பூத்துத் தீயை மூட்டினான். தீயில் ஓடு ஏறிற்று. ஓட்டிலே மணல் சூடாக வறுக்கப்பட்டது.

'சோளமே! ஓட்டில் இருக்கும் சுடு மணலிலே குதி' என்றான் ஈசன்.

'மாட்டேன். சுடுமணலிலே போட்டு என்னைக் கொல்லவா பார்க்கிறாய்?' எனச் சோளம் பரிதாபமாக அலறியது.



அதன் ஆட்சேபனையைப் பொருட் படுத்தாது, அதனைத் தூக்கிச் சுடு மணலிலே போட்டு ஈசன் வறுத் தெடுத்தான்.

மறுகணம், சோளம் மல்லிகைப் பூவைப் போன்று பால் நகை சிந்தி மலர்ந்தது! தன் னுள் மறைந்திருந்த இறையம் சத்தைத் தரி சித்த நிறைவுக்குக் குதூகலித்தது.

இந்த அற்புதத்துக்கான விளக்கத்தை அறியச் சோளம் அவாவுற்றது. அதற்கிடையில் ஈசன் மறைந்தான்!

**நன்றி - கீதையின் நிழலில் ...**


# நாய்க் குரைப்பு

நாள் தோறும்
என்னைச் சுற்றிச் - சதா
நாய்களின் குரைப்போசை...

நான் என்ன செய்ய?
நான் இருக்கும் இடத்தில் அல்ல...
அவை இருக்கும் இடத்தில்
நானிருந்து கொண்டு ...?!

குற்றம் என்னில் தான்!
நாய் குரைப்பின்
பொருள் பற்றி - எதுவும்
எனக்குத் தெரிவதில்லை!
ஏன்....
எவருக்கும் தெரிவதில்லை!

ஒரு வேளை
நாய் என்று காட்டுதலும்
அவற்றின் குரைப்பாய்
இருத்தல் கூடும்.
இருந்தும்....
நகர நாய்கள் குரைப்பது கருத்திச்சில
உள்ளூர் நாய்களும்
இங்கே
குரைத்துக் கொண்டிருக்கின்றன.
காரணம் அறியாமல்



**-வளலாய் செல்வகுமார்-**

# கடற்கரை மட்டும்



எனக்கு இன்னமும் ஞாபகம் இருக்கிறது
ஒவ்வொரு ஞாயிறு மாலையும்
மாதா கோயில் கடற்கரை மணலில்
நடந்து திரிந்து
சிப்பிகள் பொறுக்கியது.

அந்த ஒற்றைக் கட்டு மரமும்
குவியல் வலைகளுடன் குடிசையும் கூட
எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது.

மணலில் பாதம் புதைய
சிப்பிகள் கிண்டியெடுத்து
என் உள்ளங்கை இரண்டும்
சேர்த்துக் குலுக்கும்போது
தயங்கித் தயங்கி வந்தாள்
அந்தச் சிறுமி
சினேக சிரிப்புடன்
தன் சட்டைப் பையில் இருந்து
இன்னமும் எனக்குச் சிப்பிகள் தந்தாள்.

ஒரு பொழுது;
கடலைவிட்டு வீதிக்கு வர
ஆசைப்பட்ட அலைகள்
ஒரு கடற்கொள்ளையன் போல்
ஊரையே கொள்ளையடித்துத் திரும்பின.

அந்த ஒற்றைக் கட்டுமரமும்....
குவியல் வலைகளுடன் குடிசையும்
எனக்குச் சிப்பிகள் தந்த
சினேகிதியும் இல்லை.
கடற்கரை மட்டும் அப்படியே!

**-- துவாரகன் -**



# அக்கரைப் பச்சைகள்...

வெயிலான நாள்
வெம்மையைத் தணிக்க முடியாத காற்று
வீட்டு வாசற்படியில் நான்
என் வாரிசுகள்...
வெம்மையைத் தணிக்க தண்ணீர்த்துவக்குடன்
பக்கத்து வீட்டுவெள்ளைப் பிள்ளைகளும்...
கொஞ்சம் பழக்கம்தான்
நிறம் வேறுபட்டாலும் மொழி ஒன்று பட்டதால்
மனம் மாறுபடாத மழலைகள்
ஆனாலும்,
அப்பப்போ மறுத்தல்கள், முறுகல்கள்
கணத்துக்கும் நிலைமாறும் இவ்வாழ்வு
உயிர்வாழ்வதற்கும் - ஊர் போலத்தான்
உத்தரவாதம் அதிகமில்லை.
போராட்ட வாழ்வை
புறம் தள்ளி வந்ததால்
வாழ்வே போராட்டமானது எமக்கு!

**பவானி செந்தில் விநாயகம்**
**ஜேர்மனி.**

# தமிழ் ஊடகங்கள் மக்களின் பிரச்சினையை உலகுக்கு உணர்த்த உழைக்க வேண்டும்

## கடற்புலிகளின் அரசியற்துறையைச் சேர்ந்த நிலவன்

வடமராட்சி

தமிழீழ ஊடகங்களும், தமிழ் ஊடகங்களும் மக்களின் பிரச்சினைகளை உலகுக்கு உணர்த்த வேண்டும் என- வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் நிலவன் தெரிவித்தார்.

வடமராட்சி இளைய ஊடகவியலாளர்களுக்கான பயிற்சி வகுப்பு நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு ஆரம்பமானது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசு தமிழ் ஊடகவியலாளர்களை மறைமுகமாக அச்சுறுத்தியும், அழித்தும் வருகிறது. இது நிறுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்த அவர் மக்களின் பிரச்சினைகளை சர்வதேசத்துக்கு உணர்த்த இளைய ஊடகவியலாளர்கள் முன்னின்று உழைக்க வேண்டும் எனவும், இனிவரும் காலங்களில் தமிழீழ ஊடகவியலாளர்கள் தமிழீழத்திற்காக, தாய் நாட்டுக்காக குரல் எழுப்ப வேண்டும் என்றும், எமது பிரச்சினைகளை உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை கடற்புலிகளின் யாழ். மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் செஞ்சேரன் ஏற்றினார். பொதுச்சுடரினை யாழ்.மாவட்ட ஊடகவியலாளர் சங்கத் தலைவர் தவச்செல்வம் ஏற்றினார்.

கருத்துரைகளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தியாகராசா, ஊடகவியலாளரும் ஓய்வுபெற்ற தபாலக அதிபருமான ஸ்ரனிஸ்லாஸ், கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசத்தின் முகாமையாளர் பாலசிங்கம் ஆகியோர் வழங்கினர்.

## முல்லை-வட்டுவாகல் கடற்கரையில் மனித எலும்புக்கூடு கண்டெடுப்பு

முல்லைத்தீவு

முல்லைத்தீவு- வட்டுவாகல் கடற்கரை வீதியில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் மனித எலும்புக்கூடு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 2.30 மணியளவில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் முல்லைத்தீவு காவல் பணிமனையில் செய்யப்பட் முறைப்பாட்டையடுத்து காவல் பணிமனை கண்காணிப்பாளர் சம்பவ இடத்துக்குச் சென்று எலும்புக் கூட்டை பார்வையிட்டார்.

இதேவேளை, அவ்விடத்திற்கு வந்த முல்லைத்தீவு மாவட்ட நிதியாளர் சூட்டா எலும்புக்கூட்டை பார்வையிட்டதுடன், மேலதிக விசாரணையின் பொருட்டும், அடையாளம் காணும்பொருட்டும், எலும்புக்கூட்டையும் அத்துடன் காணப்பட்ட தங்க ஆபரணம், ஆடைகள் என்பவற்றையும் முல்லைத்தீவு காவல் பணிமனைக்கு எடுத்துச் செல்ல உத்தரவிட்டார்.

இந்த எலும்புக்கூடு சுனாமி கடல் அனர்த்தத்தின் போது இறந்தவருடையதாக இருக்கலாம் என விசாரணையின் போது சந்தேகிக்கப்படுவதால் இது தொடர்பாக தொடர்பு கொள்ள வேண்டியவர்கள் முல்லைத்தீவு மாவட்ட காவல் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு காவல் பணிமனை பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## மன்னார் நகரப் பகுதியில்

# கவனிப்பாரற்ற நிலையில் அலையும் சித்த சுவாதீனமற்ற மக்களின் நிலமை



மன்னார்

மன்னார் மாவட்டத்தில் புத்தி சுவாதீனமற்ற நிலையில் கவனிப்பாரின்றி கொழுத்தும் வெயிலிலும், கொட்டும் மழை யிலும் குப்பைகளோடு குப்பைகளாகப் பலர் வீதியோரங்களில் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்தகாலப் போர் நடவடிக்கைகளாலும், இயற்கை அனர்த்தங்களாலும் வேறுபல காரணங்களாலும் சித்தசுவா தினமற்றவர்களாக மனநிலை பாதிக்கப்பட்ட வர்களாகச் சமூகம் ஒதுக்கி வைத்துள்ள நிலையில், இவர்களைப் பாதுகாப்பதற்கோ, பராமரிப்பதற்கோ இங்கு எந்தவொரு இல்லமும் இல்லை, அமைப்புகளும் முன்வருவதாக இல்லை.

உண்பதற்கு உணவோ, உடுப்பதற்கான உடையோ இன்றி வீதியோரங்களில் குப்பைகளோடு குப்பையாக பல இன்னல்களுக்கு மத்தியில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்கக் கூடிய நிலையில் உள்ள தொண்டு நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியன அக்கறை கொண்டு இவர்களுக்கான இல்லம் ஒன்றை அமைத்து இவர்களைப் பாதுகாத்து பராமரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தப் பிரதேசத்தின் மனிதநேய உணர்வுள்ள மக்கள் வேண்டு கோள் விடுக்கின்றனர்.

இயங்கமுடியா நிலையில் வீதியோரங்களில் பசி,நோய், முதுமை, சித்தப்பிரமை, ஆகியவற்றால் பாதிகப்பட்வர்களாக அலைந்துதிரியும் இந்த மக்களை, குடிகாரர்கள், விசர்கள், என்றெல்லாம் அலட்சியமாய் புறந்தள்ளிவிடும் மக்களும் இங்கு இருக்கவே செய்கிறார்கள் என்பதுதான் துயரம் தரும் விடயமாகும்.

மனிதநேயப்பணிபுரிவதாக கூறிக் கொண்டு திரியும் அரச-அரச சார்பற்ற அமைப்புகளுக்கு இத்தகையோர் மனிதர்களாக தெரியவில்லைப் போலும் என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## பெண்கள் தொழில்பயற்சிகல்லூரி சான்றிதழ்கள், வழங்கும்நிகழ்வு

கிளிநொச்சி

கிளிநொச்சி ஜெயந்தி நகரில் அமைந்துள்ள பெண்கள் தொழில் பயிற்சி கல்லூரியில் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் மற்றும் அவர்களின் பாவனைக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டதையடுத்து தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். சுடரினை மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பரிதி, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளை ஆகியோர் ஏற்றினர். ஆசிஉரையை அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நிகழ்த்தினார்.

பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள், மற்றும் அவர்களின் பாவனைக்கான சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் ஏனைய உபகரணங்கள் என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்தப் பயிற்சி நெறியானது மாவீரர், போராளிகள் குடும்ப நலன் காப்பகத்தின் பெண்கள் வேலைத்திட்ட பகுதியினால் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சுதேச மேம்பாடு குறித்த ஆய்வுப்பட்டறை

கிளிநொச்சி

கிளிநொச்சியில் சுதேச மேம்பாடு தொடர்பான ஆய்வுப்பட்டறையொன்று இடம்பெறவுள்ளது. கரைச்சி பிரதேசசபை ஒன்றுகூடல் மண்டபத்தில் இன்று காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ள இந்த ஆய்வுப் பட்டறையில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள், பயிற்சிகள், சேவைகள், மேம்பாடு மற்றும் ஆய்வுகளின் அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## வவுனியாவில் கல்வி ஆய்வு மாநாடு

வவுனியா

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்குடன் கல்வி ஆய்வு மாநாடு ஒன்றை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் தண்டாயுதபாணி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சியடைந்து வருகின்றது. இவ்வாறு வீழ்ச்சிய டைந்து வரும் கல்வி நிலையை மேம்படுத்துவதற்காக இந்த மாநாடு நடத்தப்படவுள்ளது.

சுமார் 200 கல்வி பேராளர்கள் கலந்துகொள்ளும் இந்த மாநாட்டில் வீழ்ச்சியடைந் துள்ள கல்வி நிலை தொடர்பாகவும் 10 தலைப்புக்களிலான விடயதானங்களின் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.



# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### செப்ரெம்பர் -12

1910 : பொலிஸ்துறையில், திருமதி அலிஸ் ஸ்டெப்பின்ஸ் பெல்ஸ் என்ற பெண் முதன் முதலாக லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பொலிஸாக நியமிக்கப்பட்டார்.

1917 : ரஷ்யப் போர் அமைச்சர் கெரன்ஸ்க்கியை சந்தித்துப் பேசிவிட்டுத் திரும்பிய ஜெனரல் கிரைமோல் என்ற படைத்தளபதி ஒருவர் தன்னைத்தானே சுட்டு இறந்தார்.

1917 : ஆர்ஜன்ரினாவிடம் ஜேர்மனி மன்னிப்புக் கேட்டுக் கொண்ட போதும், ஜேர்மனியுடன் ராஜதந்திர உறவை முறித்துக்கொள்ள வேண்டும் என்று ஆர்ஜன்ரினா நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது.

1917 : அயர்லாந்தின் சின்பெயின் இயக்கத்துக்கு பிரிட்டன் தடை விதித்தது.

1921 : நேற்று மரணமடைந்த மகாகவி பாரதியாரின் உடல் தகனம் செய்யப்பட்டது. இறுதிச் சடங்கில் இருபதிலும் குறைவானவர்களே கலந்துகொண்டனர்.

1934 : பால்டிக் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. லாட்வியா, லிதுவேனியா, ஈஸ்டோனியா ஆகிய மூன்று பால்டிக் நாடுகளின் பிரதிநிதிகளும் தங்கள் நாடுகளின் சுதந்திரத்தைப் பாதுகாக்க பொதுப்பாதுகாப்பு உடன்படிக்கை எடுக்கவும், பொது வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றவும் ஒப்புக்கொண்டு ஏற் படுத்திக்கொண்டதே இந்த உடன்படிக்கையாகும்.

1937 : பிரிட்டனில் சிறைச்சாலையில் சிறைக்கைதிகள் செய்யும் பணிக்கு வாராவாரம் வேதனம் வழங்கும் நடைமுறை ஆரம்பமாகியது.

1938 : ஜேர்மன் மொழி பேசும் சூடெட்டென் வாழ் மக்களுக்கு தமது ஆட்சிபற்றி சுயநிர்ணயம் செய்யும் உரிமை உண்டு என ஹிட்லர் கூறினார். இதனைத் தொடர்ந்து இந்தப் பகுதியில் கொந்தளிப்பு ஏற்பட செக்கோசுலோவேக்கியா அரசு இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்தது.

1939 : அமெரிக்காவில் தேசிய நெருக்கடிநிலை அறிவிக்கப்பட்டது.

1942 : "விதியின் தாழ்ப்பாள் திறந்தது" என்று சர்ச்சிலினால் வருணிக்கப்பட்ட ஸ்டாலின்கிராட் போர் மிகத் தீவிரமாக ஆரம்பமாகியது.

1943 : இத்தாலிய அரசினால் வீட்டுக் காவலில் வைக்கப் பட்டிருந்த முஸோலினியை ஜெர்மனிய பரசூட் படையினர் "ஒட்டோஸ் கோர் ஸெனி" என்பவர் தலைமையில் வந்து மீட்டுச்சென்றனர்.

1959 : ரஷ்யாவால் லூனா - 2 என்ற விண்ணூர்தி நிலவை நோக்கி ஏவப்பட்டது.

1969 : வட வியட்நாம் மீது மீண்டும் குண்டுவீச்சை ஆரம்பிக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் உத்தரவு பிறப்பித்தார்.

1970 : நிலாவில் இருந்த மண் மாதிரிகளை எடுத்துவர லூனா -16 என்ற ஆளில்லாத விண்ணூர்தியை ரஷ்யா ஏவியது.

1974 : எதியோப்பியாவில் இராணுவப் புரட்சி நடந்தது. மன்னர் ஹெயில் சலாசி பதவியில் இருந்து விரட்டப் பட்டார். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. அரசியல் சட்டம் நிராகரிக்கப்பட்டது.

1982 : சீனத் தலைமையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. மாவோ துங்கினது வாரிசாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹீவாகியோ ஃபெங் உயர் பதவியில் இருந்து கீழிறக்கப் பட்டார்.

1983 : அண்டார்ட்டிகா உடன்படிக்கையில் இந்தியா ஆலோசனைக் குழு உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

1984 : இலங்கைத் தீவின் வடபகுதி அபிவிருத்திக்கு என ஒதுக்கப்பட்ட நிதியை போருக்குப் பயன்படுத்தப் போவதாக இலங்கை அரசு அறிவித்தது.

1988 : ஜமைக்காவில் ஏற்பட்ட சூறாவளியில் 600 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

1990 : யாழ்.கோட்டை முற்றுகையின்போது சியாமா செட்டி விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.

1994 : இலங்கை அரசுடன் பூர்வாங்க பேச்சுகளை நடத்த தேசியத் தலைவர் 4 பிரதிநிதிகளை நியமித்து, அதுபற்றி இலங்கை அரசுக்கு அறிவித்தார்.

தொகுப்பு - சந்துரு

# வவுனியா தமிழ் பொலிஸார் கொழும்புக்கு இடமாற்றம்!

வவுனியா

வவுனியா மாவட்ட பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றி வந்த தமிழ் பொலிஸார் பலர் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் கொழும்பில் கடமையாற்ற வேண்டும் என பொலிஸ் தலை மைப்பீடத்திலிருந்து கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாலேயே கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் வவுனியாவில் இவ்வாறு தமிழ் பொலிஸார் இடமாற்றம் செய்யப்படுவதால் தமிழ்மக்கள் தமது முறைப்பாடுகளை தமிழ் மொழியில் வழங்கமுடியாத சூழ்நிலை ஏற்படுமென தெரிவித்த பொது அமைப்பினர் இந்த நடவடிக்கையானது தமிழ் மக்களின் இயல்பு நடவடிக்கையை பாதிக்கும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

நாடு
என் தேசத்தை, என் ஆத்மாவையும் விட நேசிக்கிறேன்.

## நமது நோக்கு

### நிபந்தனைகள், நிராகரிப்புகள், நிர்ப்பந்தங்கள்...!

'தமிழர் தாயகம் என்று எதுவும் கிடையாது'

'வடக்கு - கிழக்குவாழ் தமிழ்மக்களுக்கு சுயநிர்ணய உரிமை என்ற எதுவும் இல்லை - வழங்கவும் முடியாது'.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான போட்டியல்ல. இது சமஷ்டி ஆட்சிக்கும், ஒற்றையாட்சிக்கும் இடையிலான போட்டியேயாகும்!

இப்படியெல்லாம் தமது கருத்தை வெளியிட்டிருப்பவர்கள் வேறுயாருமல்ல. பதினொரு நிபந்தனைகளுடன் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிக்கும் முடிவுக்கு வந்து தலதா மாளிகையில் இதற்கான உடன்பாட்டில் கையெழுத்திட நாள் குறித்திருக்கும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முக்கியஸ்தர்களேதான்.

இவர்கள் மட்டும் இப்படி 'அலம்பல்' அறிக்கையை வெளியிட்டிருந்தால் பிரச்சினையே சட்டிக்குள் இருந்தது அப்படியே வெளிவந்துள்ளது என அலட்டிக்கொள்ளாமல் விட்டிருக்கலாம்.

ஆனால், இங்கு விடயமே வேறு. ஏற்கனவே பன்னிரண்டு நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு, ஜே.வி.பியினரின் பாதங்களில் தடாலடியாக வீழ்ந்து கட்சிக் கொள்கைகளை அவர்கள் காலடியில் போட்டுவிட்டு, வெறும் பதவி ஆசையுடன் உடன்பாடொன்றை மேற்கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ - ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ள ஹெல உறுமய காரர்களின் கொள்கைகளைச் சிரம்தாழ்த்தி ஏற்றுக்கொண்டுள்ளதுடன், அவர்கள் போடும் பதினொரு நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டுள்ளாராம்.

மேலே குறிப்பிட்டுள்ள ஜே.வி.பியினரதும், ஹெல உறுமய காரர்களினதும் நிபந்தனைகள் மற்றும் கருத்து நிலைப்பாடுகளை மஹிந்த ராஜபக்ஷ முழுமையாக ஏற்றுக்கொண்டதன் மூலம், ஏற்கனவே நடைமுறையில் உள்ள போர் நிறுத்த மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டை, தற்போது ஆட்சிபீடத்தில் உள்ள அரசின் பிரதமர் என்ற முறையில், மறைமுகமாக நிராகரித்து மீறியுள்ளதாகவே கருதவேண்டியுள்ளது.

ஆகவே, சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதற்கு சாதகமான பாதைகளை இந்த உடன்பாடுகளின் மூலம் அவர் மூடத்தொடங்கி விட்டார் என்றால் அது மிகையில்லை.

இன்று இந்த நாட்டின் இனப்பிரச்சினையை விடுதலைப் புலிகளை அழிப்பதற்கான நடவடிக்கை என்ற பெயரிலான தமிழ்பேசும் மக்களுக்கு எதிரான யுத்தமொன்றை மேற்கொள்வதன் மூலம் தீர்த்துவிடலாம் என பௌத்த - சிங்கள பேரினவாதத் தலைமைகள் இரு தசாப்தகாலமாக எடுத்த கொடூர முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்த நிலையிலேயே, இன்றைய சமாதான சூழலுக்கான கதவுகளைத் திறக்குமாறு அரச தரப்பினர் நோர்வேயை அழைக்க வேண்டியதாயிற்று. ஆரம்பம் முதலே இந்த அமைதிப் பேச்சுக்களை முற்றாக எதிர்த்தவர்கள் ஜனாதிபதி தலைமையிலான ஆரம்பகால பொதுஜன ஐக்கிய முன்னணியினரும் பிற்கால ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினருமாவர்.

ஜே.வி.பியினர் இந்த இரண்டாவது அணியில் உள்ளடங்குவர்.

ஹெல உறுமயவினர் இந்தக் கூட்டணிக்குள் தம்மை உள்ளடக்கிக்கொள்ளாவிட்டாலும், சமாதான முயற்சிகளுக்கு எதிரான அணிக்கான ஆதரவை வெளிப்படையாக-தீவிரமாக வழங்கியவர்களேயாவர்.

இன்று மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க முன்வந்துள்ளதன் மூலம் அவர்கள் மஹிந்த ராஜபக்ஷ இன்றைய சமாதான நகர்வுகளுக்கு எதிரானவர் என்ற முத்திரையை அவர் மீது அழுத்தமாகப் பதித்துள்ளார்கள்.

இந்த நிலையில் இன்னமும் மஹிந்த ராஜபக்ஷவையே பிரதமராக ஏற்றுக்கொண்டிருக்கும் இன்றைய அரசாங்கம், இனிமேலும் அமைதி முயற்சிகள் குறித்த நோர்வே அனுசரணையாளர்களின் பணிகளுடன் ஒத்தியங்கும் என்று நம்புதல் முட்டாள்தனமேயாகும்.


ஒஸ்லோ பிரகடனத்தைத் தோற்கடிக்கும் வகையில் செயற்படக்கூடிய நபர் ஒருவர் ஜனாதிபதியாக வரவேண்டும். அதற்கு உத்தரவாதம் அளிப்பவராக மஹிந்த ராஜபக்ஷ இருப்பதாலேயே அவரை இந்தத் தேர்தலில் ஆதரிக்க முடிவெடுத்துள்ளோம் என ஹெல உறுமயவின் தலைவர்கள் தெரிவித்திருப்பதை மஹிந்தர் இன்னமும் மறுக்கவில்லை என்பதை சமாதான அனுசரணைப் பொறுப்பிலுள்ளவர்களும், ஏனைய சர்வதேசமும் கவனத்தில் கொள்ளுதல் அவசியமாகும்.

வடக்கு - கிழக்கு பிரதேசத்தை தமிழர் பாரம்பரிய தாயகப்பகுதியாக ஏற்றுக்கொள்ளாத, அவர்களின் சுயநிர்ணய உரிமையை நிராகரிக்கின்ற, அவர்கள் மீது தொடர்ந்தும் தமது மேலாதிக்க வெறியை செலுத்த முனைகின்ற எவரும், எந்த அமைப்பும், தமிழர் தரப்புடன் அமைதியான முறையில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கத் தயார் என்று அறிவிப்பதானது மிகமோசமான ஏமாற்று நடவடிக்கையேயாகும்.

அப்படிப்பட்ட நபர்களுடன் - அரசுடன் - அமைப்புக்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துமாறு நிர்ப்பந்திப்பதும், அழுத்தம் தருவதும் எதிர்பார்ப்புகளுக்கு முரணான விளைவுகளையே ஏற்படுத்துவதுடன், சமாதான முயற்சிகள் மீதான, அதனை முன்னெடுக்க அனுசரணை புரிவோர் மீதான அவநம்பிக்கையை மேலும் வலுப்பெறவே வழிவகுக்கும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




**'ஊர்சுற்றி' யார் பார்வையில்...**

# ஐம்பதாண்டுகளின் பின் சமஷ்டியை ஏற்பவர்கள் தமிழீழத்தையும் ஏற்பர்!

ஆயுதப்போராட்டம் எப்படி நிலைமையை மாற்றியிருக்கிறதென்பதைப் பார்த்தீரா? என்று கேட்டபடி வந்தமர்ந்தார் நண்பர் பரமசிவம்.

எதைச் சொல்லுகிறீர் என்றேன்.

முன்பெல்லாம் சமஷ்டி என்ற வார்த்தையைச் சொன்னாலே நாட்டைப் பிரிக்கப் பார்க்கும் பிரிவினைவாதி என்று முத்திரை குத்தி, வேண்டத் தகாதவன், தீண்டத் தகாதவன் மாதிரிப் பார்ப்பார்கள். இதுமட்டுமல்ல சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் என்று ஆரம்பித்த செல்வநாயகம் அவர்களையும், அவரது தமிழரசுக் கட்சியினரையும் தேசவிரோதிகளாகவே சிங்களப் பேரினவாதிகளும் அவர்களது ஊடகங்களும், சிங்கள மக்களுக்கு எடுத்துக்காட்டி வந்தனர்.

தமிழரசுக் கட்சித் தலைவர்களுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சந்தித்துத் தேர்தல் காலத்தில் இனப்பிரச்சினை பற்றிப் பேசினால், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் நாட்டைத் துண்டித்துத் தமிழரசுக் கட்சியினரிடம் கொடுக்கப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் பிரசாரம் செய்வர். இதேபோல், ஐக்கிய தேசியக் கட்சியினர் எவராவது தமிழரசுக் கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்தினால் ஐக்கிய தேசியக் கட்சி நாட்டைப் பிரித்து தமிழர்களிடம் கொடுக்கப்போவதாகப் பிரசாரம் செய்வர் என்று பரமசிவம் சொன்னார்.

இது மட்டுமல்ல, அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாமென சுதந்திரக் கட்சி பிரதேச சபைகள் அமைக்க முன்வந்தால், ஐக்கிய தேசியக் கட்சி அதை எதிர்த்து பாதயாத்திரை நடத்திக் குழப்பத்தை ஏற்படுத்தும். இதற்குப் பதிலாக மாவட்ட சபைகள் அமைக்கலாமென இரகசியமாக ஐக்கிய தேசியக் கட்சி முனைந்தால், இடதுசாரிகளையும் சேர்த்து சுதந்திரக் கட்சி கிளர்ச்சி செய்யும் என்று நான் சொன்னேன்.

தமிழ் மக்களுக்கு எந்த, ஏதாவது உரிமை வழங்குவதற்கு எந்தக் கட்சியாவது பேச்சளவில் சொன்னாலும் கூட உடனே மற்றக் கட்சி எதிர்த்துக் குரல் கொடுக்கும். இருந்த உரிமைகளைக் கூடப் பறித்தெடுப்பதிலேயே இரண்டு கட்சிகளும் போட்டி போட்டன.

இதேசமயம், தமிழ் மக்களுக்கெதிராக நாட்டில் இனத்துவேஷத்தைக் கிளப்பி தமிழர்மீது தாக்குதல் நடத்துவதற்கும் இரு கட்சிகளும் காரணமாயிருந்தன. ஒற்றையாட்சி அமைப்பில் மாற்றம் செய்வது பற்றி நாடாளுமன்றத்தினுள்ளேயே தமிழ்ப் பிரதிநிதிகள் பேசுவது கஷ்டமாக இருக்கும் என்று சொன்ன பரமசிவம் இன்று நிலைமை எப்படி மாறியிருக்கிறது பார்த்தீரா என்று கேட்டார்.

இன்று ஒற்றையாட்சி முறை நீடித்தால் புலிகளின் வன்செயல்களும் ஓயாது என்று ஒரு சிங்களவரே சிங்கள, ஆங்கில ஏடுகளில் எழுதும் அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது என்று நான் சொன்னேன்.

இது மட்டுமல்ல, ஒற்றையாட்சியால்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்று மஹிந்தவுடன் ஜே.வி.பி செய்த உடன்படிக்கையை ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரே கண்டிக்கும் அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது என்று பரமசிவம் சொன்னார்.

சமஷ்டி என்றால் பிரிவினை என்றும், நாடு பிளவுபட்டுவிடுமென்றும் கூச்சலிட்டவர்கள் இன்று சமஷ்டி அமைப்பினால்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமென்று இரு கட்சியிலுமுள்ளவர்கள் இன்று உரக்கச் சொல்லத் தொடங்கிவிட்டார்கள். காந்தியவழியில், சாத்வீகப் போராட்டங்கள் நடத்தி வாழு - வாழவிடு என்ற தாரக மந்திரத்தை தந்தை செல்வா சொன்னபோதும், போராட்டம் நடத்தியபோதும் ஆயுதப்படைகளின் உதவியுடன் போராட்டங்களை அடக்கி ஒடுக்கி தலைவர்களைச் சிறையிலடைத்தும் எக்காளமிட்ட சிங்களத் தலைவர்கள் இன்று ஆயுதப் போராட்டத்தின் பயனாக சமஷ்டியைக் கொண்டுவந்து சமரசம் பேசலாமென்கிறார்கள்.

ஐம்பதாண்டுகளுக்கு மேலாக சமஷ்டி ஆட்சி கோரிப் போராடியபின், இனி வேறு வழியில்லை என்ற நிலையில் இழந்த தமிழீழ அரசை மீண்டும் அமைப்போம் என்று தமிழ்த் தலைவர்கள் ஒரே குரலில் தீர்மானித்தார்கள்.

இந்தத் தீர்மானத்தை ஜனநாயக முறையில் தமிழர் தாயக மக்கள் 1977ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் தங்கள் ஆணையாகத் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு வழங்கினார்கள். ஜனநாயக முறையில் மக்கள் விடுத்த ஆணையைப் பெரும்பான்மை ஜனநாயகம் உதாசீனம் செய்து, இனக்கலகத்தைத் தூண்டி- இனப்படுகொலையிலிறங்கியது. இதன்பின்னர்தான் தமிழ் இளைஞர்கள் பிரபாகரன் தலைமையில் இழந்த தமிழீழ அரசை மீண்டும் அமைக்க ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். இன்று தமிழர் தாயகத்தில் பெரும்பகுதியில் ஈழத் தமிழர் ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது. இனி முழுமை பெறவேண்டியதுதான் பாக்கி என்று சொன்னேன்.

ஜே.வி.பி., ஹெல உறுமய மற்றும் சில புத்த பிக்குகள் தவிர, நாட்டு மக்கள் உண்மை நிலையைப் புரிந்துகொண்டுள்ளனர். வெளிநாடுகள் பலவும் இதை உணர்ந்து வருகின்றன.

இலங்கையில் முன்பு அமெரிக்கத் தூதுவராக இருந்த ரெரசிற்ரா ஸ்காஃபர் வாஷிங்ரன் நகரில் நடந்த ஒரு மாநாட்டில் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகக் கட்டுப்படுத்திவிடலாம் என்பது நடைமுறைக்குச் சாத்தியமில்லாத விடயம் என்று சரியாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இனியும் பேச்சுவார்த்தை என்று காலம் கடத்துவதோ, வெளிநாடுகளின் உதவிகளைப் பெற்று விடுதலைப் புலிகளை ஒழித்து தமது ஆட்சியை நிலைநாட்டலாம் என்று பிடிவாதம் பிடிப்பதோ சிங்கள மக்களுக்கும், நாட்டுக்கும் நல்லதல்ல. இன்று சிங்களத் தலைவர்களுக்கு இரண்டே இரண்டு வழிகள்தானிருக்கின்றன. ஒன்று சமஷ்டி ஆட்சி என்றால் எப்படிப்பட்ட சமஷ்டி ஆட்சி என்பது பற்றி விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி முடிவு செய்வது. இரண்டாவது, சமாதானமாக மலேசியாவும், சிங்கப்பூரும் போல சிங்கள ஈழமும் தமிழீழமும் பிரிந்து தங்கள் ஆட்சிகளை நட்பாக நடத்துவது.

இதுதான் நாடு மேலும் சகல துறைகளிலும் மோசமடையாமல் முன்னேற்றப் பாதைக்குச் செல்வதற்குள்ள வழிகள் என்று பரமசிவம் சொன்னார். எழுந்து போவதற்குப் புறப்பட்ட நண்பர் நின்று, தமிழ் மக்கள் எல்லோரும் ஒரே குரலில் தமிழ் ஈழம்தான் ஒரே வழி என்று நின்றால், உலக நாடுகளும் வாழ்த்தி வரவேற்கத் தயங்க மாட்டா என்று சொல்லி நடந்தார். சமஷ்டிக்கு ஐம்பதாண்டுகள் கழித்து ஒப்புக் கொண்டவர்கள் தமிழீழத்துக்கு, இனிக் காலம் கடத்தமாட்டார்கள் என்றும் அவர் சொல்லிக்கொண்டு போனார்.

# தமிழீழ மீட்புநிதி மீளளிப்பு- 2005

தமிழீழ மீட்புநிதி மீளளிப்புக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்களை தமிழீழ நிதித்துறை வெளியிட்டுள்ளது.
பிரதேச ரீதியாகத் தெரிவானோரின் விபரம் வருமாறு:

## கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவு
### மூப்பு அடிப்படையில் தெரிவானோர்

(நேற்றைய தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| 909 | யா/க/7604 | திருமதி. லட்சுமிப்பிள்ளை வல்லிபுரம் |
| 910 | யா/க/7610 | திரு. சரவணமுத்துக்குமாரசூரியர் அருளம்பலக்குமாரசூரியர் |
| 911 | யா/க/7629 | திரு. ஆறுமுகம் வீரகத்தி |
| 912 | யா/க/7631 | திரு. சின்னம்மா இரத்தினம் |
| 913 | யா/க/7681 | திருமதி. சின்னம்மா சுப்பிரமணியக்குருக்கள் |
| 914 | யா/க/7689 | திரு. ஆறுமுகம் பரராசசிவம் |
| 915 | யா/க/7693 | திரு. சின்னத்தம்பி கருணாசிங்கம் |
| 916 | யா/க/7709 | திருமதி. இராசம்மா ஆறுமுகம் |
| 917 | யா/க/7722 | திரு. இளையகுட்டி நடராசா |
| 918 | யா/க/7726 | திரு. பாலன் சுந்தரன் |
| 919 | யா/க/7745 | திரு. ஞானியர் கணேசையர் |
| 920 | யா/க/7746 | திருமதி. பொன்னம்மா கந்தையா |
| 921 | யா/க/7768 | திரு. வல்லிபுரம் தியாகராசா |
| 922 | யா/க/7789 | திருமதி. தஞ்சம்மா சின்னத்துரை |
| 923 | யா/க/7804 | திரு. நடேசு பாஸ்கரன் |
| 924 | யா/க/7806 | திரு. கந்தையா பொன்னையா |
| 925 | யா/க/7820 | திருமதி. தங்கமுத்து கந்தையா |
| 926 | யா/க/7823 | திருமதி. மகேஸ்வரி கனகசபை |
| 927 | யா/க/7847 | திரு. முருகேசு இளையதம்பி |
| 928 | யா/க/7848 | திருமதி. இலட்சுமி சுப்பன் |
| 929 | யா/க/7858 | திரு. சீனியன் கந்தையா |
| 930 | யா/க/7868 | திரு. வீரகததி சின்னத்துரை |
| 931 | யா/க/7880 | திரு. மெல்லியன் மாணிக்கம் |
| 932 | யா/க/7901 | திரு. கந்தசாமி பரமானந்தம் |
| 933 | யா/க/7913 | திருமதி. அன்னபூரணம் கதிர்காமத்தம்பி |
| 934 | யா/க/7926 | திரு. கணபதிப்பிள்ளை முருகேசு |
| 935 | யா/க/7938 | திரு. சின்னையா வைத்திலிங்கம் |
| 936 | யா/க/7943 | திருமதி. நாகரத்தினம் பொன்னையா |
| 937 | யா/க/7944 | திருமதி. மீனாட்சி சண்முகம் |
| 938 | யா/க/7949 | திருமதி. பாக்கியம் பொன்னுத்துரை |
| 939 | யா/க/7968 | திரு. வல்லிபுரம் குமாரசாமி |
| 940 | யா/க/7973 | திரு. செல்வநாயகம் சிவலிங்கம் |
| 941 | யா/க/7981 | திரு. குமரேசு வீரவாகு |
| 942 | யா/க/7993 | திருமதி. சின்னம்மா வல்லி |
| 943 | யா/க/8003 | திரு. கிருஸ்ணபிள்ளை எதிர்வீரசிங்கம் |
| 944 | யா/க/8005 | திரு. கந்தசாமி தங்கராசா |
| 945 | யா/க/8012 | திரு. இளையதம்பி கணபதிப்பிள்ளை |
| 946 | யா/க/8025 | திருமதி. சோபனம் இராசா |
| 947 | யா/க/8030 | திரு. சீனிவாசகம் சண்முகம் |
| 948 | யா/க/8038 | திருமதி. இலட்சுமி சிதம்பரம் |
| 949 | யா/க/ 8040 | திருமதி. சிவகாமிப்பிள்ளை மாணிக்கம் |
| 950 | யா/க/8046 | திரு. வல்லி நாகநாதி |
| 951 | யா/க/8049 | திரு. கந்தையா குமாரசுவாமி |
| 952 | யா/க/8059 | திரு. சின்னதம்பி ஆறுமுகம் |
| 953 | யா/க/8060 | திருமதி. பொன்னம்மா இரத்தினம் |
| 954 | யா/க/8067 | செல்வி. விசாலாட்சி வேலுப்பிள்ளை |
| 955 | யா/க/8075 | திரு. செல்லையா தங்கராசா |
| 956 | யா/க/8086 | திரு. குமரையா பரமசிவம் |
| 957 | யா/க/8090 | திருமதி. சின்னத்தங்கம் செல்லன் |
| 958 | யா/க/8112 | திருமதி. சின்னப்பிள்ளை இராசன் |
| 959 | யா/க/8122 | திரு. சின்னக்குட்டி சின்னையா |
| 960 | யா/க/8135 | திரு. வீரகத்தி சிதம்பரபிள்ளை |
| 961 | யா/க/8149 | திரு. கிருஷ்ணபிள்ளை பொன்னுத்துரை |
| 962 | யா/க/8150 | திரு. வல்லிபுரம் கார்த்திகேசு |
| 963 | யா/க/8166 | திரு. குணரத்தினம் சின்னத்தம்பி |
| 964 | யா/க/8167 | திருமதி. செலலாச்சி பொன்னம்பலம் |
| 965 | யா/க/8176 | திரு. ஆறுமுகம் சாம்பசிவம் |
| 966 | யா/க/8177 | திரு. ஆறுமுகம் நடராசா |
| 967 | யா/க/8182 | திருமதி. செல்வபாக்கியம் இராசதுரை |
| 968 | யா/க/8186 | திரு. நாகன் தில்லையன் |
| 969 | யா/க/8192 | திரு. கணபதிப்பிள்ளை செல்வநாயகம் |
| 970 | யா/க/8202 | திருமதி. மகேஸ்வரி செல்லத்துரை |
| 971 | யா/க/8204 | திருமதி. அன்னலட்சுமி கந்தையா |
| 972 | யா/க/8206 | திரு. சண்முகம் நடேசன் |
| 973 | யா/க/8218 | திரு. பாலன் பொன்னன் |
| 974 | யா/க/8221 | திருமதி. சொர்ணம்மா சுப்பிரமணியம் |
| 975 | யா/க/8224 | திருமதி. சரஸ்வதி சப்பிரமணியம் |

## பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவு
### குலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்

| | | |
|---|---|---|
| 1 | கி/ப/103 | திரு. செல்லத்துரை தங்கராசா |
| 2 | கி/ப/295 | திரு. குமாரவேலு சேனாதிராசா |
| 3 | கி/ப/300 | திரு. சதாசிவம் இரத்தினசிங்கம் |
| 4 | கி/ப/331 | திருமதி. லீலாவதி கணபதிப்பிள்ளை |
| 5 | கி/ப/618 | திரு. பெரியதம்பி மோகனராசன் |
| 6 | கி/ப/651 | திரு. கந்தையா நீலையினார் |
| 7 | கி/ப/696 | திரு. யோண் செல்வநாயகம் |
| 8 | கி/ப/747 | திரு. சரவணமுத்து செல்வராசா |
| 9 | கி/ப/865 | திரு. இராயப்பு மத்தியாஸ் |
| 10 | கி/ப/916 | திரு. சின்னத்துரை வன்னியசிங்கம் |

## பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவு
### மூப்பு அடிப்படையில் தெரிவானோர்

| | | |
|---|---|---|
| 1 | கி/ப/8 | திரு. சுவாமிநாதர் கந்தையா நல்லையா |
| 2 | கி/ப/63 | திரு. சின்னர் ஆறுமுகம் |
| 3 | கி/ப/64 | திரு. ஆறுமுகம் கந்தையா |
| 4 | கி/ப/79 | திரு. செல்லையா சிற்றம்பலம் |
| 5 | கி/ப/87 | திரு. வேலாயுதம் கணபதிப்பிள்ளை |
| 6 | கி/ப/102 | திரு. கணபதிப்பிள்ளை புண்ணியர் |
| 7 | கி/ப/105 | திரு. சின்னையா பெரியதம்பி |
| 8 | கி/ப/108 | திரு. கந்தையா பொன்னையா |
| 9 | கி/ப/139 | திரு. காசிப்பிள்ளை கணபதிப்பிள்ளை |
| 10 | கி/ப/180 | திரு. முத்து மரியநாயகம் |
| 11 | கி/ப/182 | திரு. சின்னக்குட்டியர் பொன்னுத்துரை |
| 12 | கி/ப/187 | திருமதி. ஞானப்பூங்கோதை கதிரமலைநாதன் |
| 13 | கி/ப/191 | திரு. கந்தையா சின்னத்துரை |
| 14 | கி/ப/194 | திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி |
| 15 | கி/ப/203 | திரு. தம்பையா சிவப்பிரகாசம் |
| 16 | கி/ப/207 | திரு. மனுவேற்பிள்ளை பீற்றர் பெனடிற் |
| 17 | கி/ப/236 | திரு. வீரசிங்கம் சுப்பிரமணியம் |
| 18 | கி/ப/249 | திருமதி. தங்கம் சின்னத்தம்பி |
| 19 | கி/ப/253 | திருமதி. கற்பகம் சிதம்பரி |
| 20 | கி/ப/265 | திரு. இளையதம்பி இரத்தினம் |
| 21 | கி/ப/270 | திருமதி. கனகம்மா யோன் |
| 22 | கி/ப/297 | திரு. கார்த்திகேசு இராசரத்தினம் |
| 23 | கி/ப/308 | திரு. யாக்கோப்பு மரியநாயகம் |
| 24 | கி/ப/327 | திருமதி. அன்னம்மா அந்தோனிப்பிள்ளை |
| 25 | கி/ப/343 | திரு. சுப்பர் சின்னத்துரை |
| 26 | கி/ப/353 | திருமதி. பாக்கியம் சண்முகம் |
| 27 | கி/ப/356 | திருமதி. செல்லம்மா தம்பாபிள்ளை |
| 28 | கி/ப/360 | திரு. கதிர்காமு செல்லத்துரை |
| 29 | கி/ப/370 | திருமதி. அடைக்கலம் அந்திரேசு |
| 30 | கி/ப/373 | திரு. ஆறுமுகம் கந்தையா |
| 31 | கி/ப/376 | திரு. வயிரவிப்பிள்ளை நாகலிங்கம் |
| 32 | கி/ப/382 | திருமதி. பொன்னம்மா வைத்திலிங்கம் |
| 33 | கி/ப/386 | திரு. லாசறு தேவசகாயம் |
| 34 | கி/ப/401 | திரு. கதிரித்தம்பி வாரித்தம்பி |
| 35 | கி/ப/424 | திருமதி. அக்கினேஸ் யோசேப்பு |
| 36 | கி/ப/428 | திருமதி. செபமாலை யோசேப் |
| 37 | கி/ப/430 | திரு. பொன்னப்பா கனகசபை |
| 38 | கி/ப/439 | திரு. மத்தியாஸ் இராயப்பு |
| 39 | கி/ப/446 | திரு. சங்கரப்பிள்ளை சரவணமுத்து |
| 40 | கி/ப/455 | திரு. தம்பு இராமலிங்கம் |
| 41 | கி/ப/476 | திருமதி. சிவகாமிப்பிள்ளை இரத்தினராசா |
| 42 | கி/ப/492 | திருமதி. தெய்வானை வேலுப்பிள்ளை |
| 43 | கி/ப/493 | திருமதி. செல்லம்மா சிதம்பரப்பிள்ளை |
| 44 | கி/ப/497 | திரு. சின்னத்துரை குமாரசாமி |
| 45 | கி/ப/504 | திருமதி. இரஞ்சிதமலர் கந்தையா |
| 46 | கி/ப/520 | திரு. கனகசபை கனகலிங்கம் |
| 47 | கி/ப/541 | திரு. சின்னையா சிவராசா |
| 48 | கி/ப/558 | திருமதி. பூரணம் வீரகத்தி |
| 49 | கி/ப/572 | திரு. தம்பையா கந்தையா |
| 50 | கி/ப/588 | திரு. கந்தையா துரைராசா |
| 51 | கி/ப/620 | திரு. கார்த்திகேசு சின்னத்தம்பி |
| 52 | கி/ப/675 | திருமதி. மாணிக்கம் கந்தையா |
| 53 | கி/ப/677 | திருமதி. மரியபிள்ளை சுவக்கீன் |
| 54 | கி/ப/704 | திரு. இளையதம்பி சின்னத்தம்பி |
| 55 | கி/ப/721 | திரு. பொன்னப்பா தம்பிராசா |
| 56 | கி/ப/727 | திருமதி. சிவசோதி சபாரத்தினம் |
| 57 | கி/ப/765 | திருமதி. பொன்னம்மா கந்தசாமி |
| 58 | கி/ப/768 | திருமதி. சரஸ்வதி சின்னத்துரை |
| 59 | கி/ப/789 | திரு. அன்னமுத்து வைரமுத்து |
| 60 | கி/ப/792 | திரு. சிற்றம்பலம் தர்மகுலசிங்கம் |
| 61 | கி/ப/798 | திருமதி. இராசமணி ஜயம்பிள்ளை |
| 62 | கி/ப/800 | திருமதி. சாந்தநாயகி செல்லத்தம்பி |
| 63 | கி/ப/802 | திருமதி. பொன்னம்மா அப்புக்குட்டி |
| 64 | கி/ப/804 | திரு. கனகசபை செல்லையா |
| 65 | கி/ப/811 | திரு. ஏரம்பு சின்னத்தம்பி |
| 66 | கி/ப/823 | திரு. நாகலிங்கம் முருகையா |
| 67 | கி/ப/839 | திருமதி. சின்னம்மா சுந்தரம் |
| 68 | கி/ப/877 | திருமதி. செல்லம்மா சின்னத்துரை |
| 69 | கி/ப/883 | திரு. பொன்னப்பா சரவணமுத்து |
| 70 | கி/ப/905 | திரு. மயில்வாகனம் பொன்னையா |
| 71 | கி/ப/938 | திரு. கணபதிப்பிள்ளை சிவசம்பு |
| 72 | கி/ப/971 | திருமதி. திரேசம்மா பீற்றர் |

## பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவு
### மூப்பு அடிப்படையில் தெரிவானோர்

| | | |
|---|---|---|
| 1 | யா/பரு/24 | திரு. நாகலிங்கம் செல்வானந்தம் |
| 2 | யா/பரு/28 | திருமதி. யோகம்மா கதிரித்தம்பி |
| 3 | யா/பரு/30 | திருமதி. சவுந்தரியம்மா காஞ்சிமாவடிவேல் |
| 4 | யா/பரு/45 | திரு. செல்லையா சிவனடியார் |
| 5 | யா/பரு/47 | திரு. சின்னத்தம்பி கிருஷ்ணசாமி |
| 6 | யா/பரு/64 | திருமதி. சரஸ்வதி சாத்தாமுத்து |
| 7 | யா/பரு/76 | திரு. சிவப்பிரகாசம் குமாரசாமி |
| 8 | யா/பரு/78 | திருமதி. மாரிமுத்து சிவராசா |
| 9 | யா/பரு/81 | திரு. ஐயாமுத்து இரத்தினசிங்கம் |
| 10 | யா/பரு/100 | திரு. இராசமாணிக்கம் சிவலிங்கம் |
| 11 | யா/பரு/101 | திரு. வயிரமுத்து சின்னராசா |
| 12 | யா/பரு/105 | திருமதி. பாரிசாதம் இராசரத்தினம் |
| 13 | யா/பரு/120 | திருமதி. சின்னத்தங்கம் இராசரத்தினம் |
| 14 | யா/பரு/130 | திருமதி. மகாலெட்சுமி நாகரெத்தினம் |
| 15 | யா/பரு/136 | திரு. இரத்தினவடிவேல் சோதிப்பிரமானந்தர் |
| 16 | யா/பரு/138 | திருமதி. சம்பூரணம் கதிர்காமலிங்கம் |
| 17 | யா/பரு/146 | திருமதி. சரஸ்வதிதேவி சிங்காரவடிவேல் |
| 18 | யா/பரு/154 | திருமதி. நாகரத்தினம் இரத்தினசாமி |
| 19 | யா/பரு/158 | திருமதி. பூரணம் இராசரெத்தினம் |
| 20 | யா/பரு/167 | திரு. கந்தையா அழகையா |
| 21 | யா/பரு/169 | திருமதி. எமிலிஎலிசபேத் பாக்கியநாதர் |
| 22 | யா/பரு/185 | திரு. அருணாசலம் இராமலிங்கம் |
| 23 | யா/பரு/194 | திரு. கிருஷ்ணசாமி சுந்தரலிங்கம் |
| 24 | யா/பரு/229 | திரு. வெங்கடாசலம் சச்சிதானந்தவேல் |
| 25 | யா/பரு/235 | திரு. குழந்தைவேலு வேலாயுதன் |
| 26 | யா/பரு/242 | திரு. இரத்தினவடிவேல் இராமநாதன் |
| 27 | யா/பரு/252 | திரு. சபாரத்தினம் இராமசாமி |
| 28 | யா/பரு/286 | திரு. மயில்வாகனம் வெங்கடாசலபிள்ளை |
| 29 | யா/பரு/341 | திரு. வைத்திலிங்கம் பொன்னம்பலம் |
| 30 | யா/பரு/346 | திருமதி. சரஸ்வதி விசாகப்பெருமாள் |
| 31 | யா/பரு/379 | திருமதி. தங்கப்பொன்னு சிங்கரத்தினம் |
| 32 | யா/பரு/382 | திரு. நாகமுத்து துரைசாமி |
| 33 | யா/பரு/392 | திரு. தில்லையம்பலம் பரராசசிங்கம் |
| 34 | யா/பரு/404 | திருமதி. சோதிப்பிள்ளை பொன்னுத்துரை |
| 35 | யா/பரு/407 | திரு. சின்னத்தம்பி சந்திரசேகரம் |
| 36 | யா/பரு/418 | திரு. தாமோதரம்பிள்ளை கந்தசாமி |
| 37 | யா/பரு/422 | திரு. கணபதி சின்னப்பு |
| 38 | யா/பரு/435 | திரு. நவரத்தினசாமி சிவபாதசுந்தரம் |
| 39 | யா/பரு/436 | திருமதி. அன்னப்பிள்ளை இராமலிங்கம் |
| 40 | யா/பரு/446 | திரு. கந்தவனம் கணபதிப்பிள்ளை |
| 41 | யா/பரு/449 | திரு. கந்தையா நல்லருளானந்தம் |
| 42 | யா/பரு/461 | திரு. குழந்தைவேலு செல்வராசா |
| 43 | யா/பரு/463 | திரு. வேலுப்பிள்ளைகந்தையா பாலசிங்கம் |
| 44 | யா/பரு/464 | திரு. தம்பிராசா காசிநாதர் |
| 45 | யா/பரு/470 | திரு. இராமசாமி அனந்தராசா |
| 46 | யா/பரு/473 | திரு. வெங்கடாசலம் வேலும்மயிலும் |
| 47 | யா/பரு/497 | திரு. குட்டியன்பொன்னர் இராசையா |
| 48 | யா/பரு/512 | திரு. நவரத்தினசாமி திருஞானசம்பந்தபிள்ளை |
| 49 | யா/பரு/526 | திரு. சுப்பிரமணியம் தருமலிங்கம் |
| 50 | யா/பரு/543 | திரு. கோவிந்தி மகாலிங்கம் |
| 51 | யா/பரு/563 | திரு. வயிரமுத்து கந்தசாமி |
| 52 | யா/பரு/591 | திரு. விநாயகம் சிங்காரவடிவேலு |
| 53 | யா/பரு/594 | திரு. குமாரசாமி பரமு |
| 54 | யா/பரு/623 | திரு. இளையவன் ஆறுமுகம் |
| 55 | யா/பரு/624 | திரு. முருகுப்பிள்ளை சோமாஸ்கந்தர் |
| 56 | யா/பரு/631 | திருமதி. வேதநாயகி வரதராஜா |
| 57 | யா/பரு/635 | திருமதி. இராசரத்தினம் கனகசபை |
| 58 | யா/பரு/642 | திருமதி. சுந்தரேஸ்வரி சிவஞானசுந்தரம் |
| 59 | யா/பரு/644 | திருமதி. ஜானகி அருள்சுந்தரம் |
| 60 | யா/பரு/654 | திரு. முருகேசு செல்வமாணிக்கம் |
| 61 | யா/பரு/658 | திரு. சுப்பையா வைத்திலிங்கம் |
| 62 | யா/பரு/681 | திரு. சுப்பிரமணியம் கணேசமூர்த்தி |
| 63 | யா/பரு/688 | திருமதி. சாவித்திரி செல்வரட்ணம் |
| 64 | யா/பரு/689 | திருமதி. நாகம்மா சிவகுருநாதன் |
| 65 | யா/பரு/700 | திரு. முருகுப்பிள்ளை சுப்பிரமணியம் |
| 66 | யா/பரு/725 | திரு. வேலுப்பிள்ளை பாலசிங்கம் |
| 67 | யா/பரு/739 | திரு. துரையப்பா கிருஷ்ணசாமி |
| 68 | யா/பரு/756 | திரு. மு.கந்தவனம் சதாசிவம் |
| 69 | யா/பரு/761 | திருமதி. அக்னஸ் சின்னத்துரை |
| 70 | யா/பரு/764 | திரு. செல்லப்பா கந்தப்பிள்ளை |
| 71 | யா/பரு/773 | திரு. கதிர்காமு கிருஷ்ணபிள்ளை |
| 72 | யா/பரு/781 | திரு. விநாயகர் கந்தையா விநாயகம் |
| 73 | யா/பரு/784 | திரு. சிவப்பிரகாசம் சிவசுந்தரம் |
| 74 | யா/பரு/792 | திரு. கந்தசாமி சீவரத்தினம் |
| 75 | யா/பரு/794 | திருமதி. பகவதி பாலசுப்பிரமணியம் |
| 76 | யா/பரு/799 | திரு. சின்னப்பு கந்தசாமி |
| 77 | யா/பரு/803 | திரு. சின்னத்துரை தங்கராசா |
| 78 | யா/பரு/817 | திருமதி. மகேஸ்வரி சொக்கலிங்கம் |
| 79 | யா/பரு/823 | திருமதி. மனோன்மணி வல்லிபுரம் |
| 80 | யா/பரு/824 | திரு. சின்னமுத்து திருநாவுக்கரசுமுதலி |
| 81 | யா/பரு/842 | திருமதி. அபிராமிப்பிள்ளை பாலசிங்கம் |
| 82 | யா/பரு/850 | திருமதி. பொன்னம்மா ஆறுமுகம் |
| 83 | யா/பரு/853 | திரு. கந்தையா குணரத்தினம் |
| 84 | யா/பரு/862 | திரு. நடர்ஜா நாகலிங்கம் |
| 85 | யா/பரு/870 | திருமதி. பூபதியம்மா சதாசிவம் |
| 86 | யா/பரு/873 | திரு. சிதம்பரப்பிள்ளை கந்தையா |
| 87 | யா/பரு/880 | திரு. வேதவனம் பசுபதி |
| 88 | யா/பரு/888 | திரு. இராமசாமி துரைராசா |
| 89 | யா/பரு/890 | திருமதி. யோகாம்பிகை வரதராசா |
| 90 | யா/பரு/901 | திருமதி. புவனேஸ்வரி கணேசன் |
| 91 | யா/பரு/906 | திரு. வீரகத்திப்பிள்ளை நடராசா |
| 92 | யா/பரு/924 | திரு. பொன்னர் பரஞ்சோதி |
| 93 | யா/பரு/940 | திருமதி. ரகுவதி துரைராசா |
| 94 | யா/பரு/947 | திரு. தொம்மைப்பிள்ளை இம்மனுவேல் |
| 95 | யா/பரு/958 | திரு. நித்தியானபிள்ளை யோகேந்திரன் |
| 96 | யா/பரு/965 | திருமதி. இராஜேஸ்வரி வேலாயுதம் |
| 97 | யா/பரு/992 | திரு. கந்தையா சிவபாதம் |
| 98` | யா/பரு/993 | திரு. மரியாம்பிள்ளை அருளானந்தம் |
| 99 | யா/பரு/1009 | திரு. தம்பிராசா கனகசூரியம் |
| 100 | யா/பரு/1019 | திரு. கந்தையா தேவசிகாமணி |
| 101 | யா/பரு/1023 | திரு. செல்லையா கனகசபை |
| 102 | யா/பரு/1028 | திருமதி. மங்கயற்க்கரசி சிவஞானசுந்தரம் |
| 103 | யா/பரு/1035 | திரு. பிலிப் அந்தனி |
| 104 | யா/பரு/1041 | திரு. கிருஷ்ணபிள்ளை கோவிந்தபிள்ளை |
| 105 | யா/பரு/1084 | திருமதி. பாக்கியலட்சுமி திருவிளங்கம் |
| 106 | யா/பரு/1086 | திருமதி. திலகவதி செல்வராசா |
| 107 | யா/பரு/1093 | திரு. சிவசிதம்பரம் சற்குணரத்தினம் |
| 108 | யா/பரு/1104 | திரு. வேலுப்பிள்ளை பசுபதி |
| 109 | யா/பரு/1112 | திரு. கந்தையா இராசரத்தினம் |
| 110 | யா/பரு/1114 | திருமதி. புனிதவதி சந்திரசேகரம் |
| 111 | யா/பரு/1118 | திருமதி. மங்கையர்கரசி கந்தசாமி |
| 112 | யா/பரு/1128 | திரு. சின்னத்தம்பி செல்லத்துரை |
| 113 | யா/பரு/1134 | திருமதி. நாகேஸ்வரி இரத்தினசபாபதி |
| 114 | யா/பரு/1137 | திரு. மனுவேல்பிள்ளை பீற்றர் |
| 115 | யா/பரு/1142 | திரு. மருதப்பா கோபாலசிங்கம் |
| 116 | யா/பரு/1161 | திருமதி. சிவபாக்கியம் கதிரவேற்பிள்ளை |
| 117 | யா/பரு/1177 | திரு. செந்திவேற்பிள்ளை சிவப்பிரகாசம் |
| 118 | யா/பரு/1190 | திரு. நல்லதம்பி செல்லையா |
| 119 | யா/பரு/1193 | திரு. இரத்தினம் திருஞானசம்பந்தர் |
| 120 | யா/பரு/1197 | திரு. சங்கரப்பிள்ளை வீரகத்திப்பிள்ளை |
| 121 | யா/பரு/1210 | திரு. சின்னத்துரை அழகையா |
| 122 | யா/பரு/1212 | திரு. சூசைமைக்கல் பற்றிக்பர்னாண்டோ |
| 123 | யா/பரு/1214 | திரு. அருணாசலம்தர்மராசா ஜெகதீசன் |
| 124 | யா/பரு/1234 | திரு. நாகமணி இராசரத்தினம் |
| 125 | யா/பரு/1238 | திரு. சிவசம்பு தியாகராசா |
| 126 | யா/பரு/1239 | திரு. விநாயம் தெய்வேந்திரன் |
| 127 | யா/பரு/1254 | திருமதி. திலகவதி கனகரத்தினம் |
| 128 | யா/பரு/1259 | திரு. வையிரமுத்து அட்சலிங்கம் |
| 129 | யா/பரு/1260 | திருமதி. சிவயோகம் கிருஷ்ணசாமி |
| 130 | யா/பரு/1263 | திரு. அல்பிறேட்யோசேப் அன்ரன்ராஜசேகரன் |
| 131 | யா/பரு/1264 | திரு. கோபாலு இராசரத்தினம் |
| 132 | யா/பரு/1266 | திருமதி. இரத்தினேஸ்வரி சிவகடாட்சம் |
| 133 | யா/பரு/1272 | திருமதி. அன்னமுத்து கோவிந்தபிள்ளை |
| 134 | யா/பரு/1289 | திரு. இரத்தினசாமி தங்கவேலாயுதம் |
| 135 | யா/பரு/1294 | திரு. முத்துக்குமாரு தங்கராசா |
| 136 | யா/பரு/1298 | திரு. வினாசி சிவக்கொழுந்து |
| 137 | யா/பரு/1307 | திருமதி. மேரிறோஸ் இருதயநாதன் |
| 138 | யா/பரு/1309 | திரு. இராமசாமி சபாரத்தினம் |
| 139 | யா/பரு/1320 | திருமதி.. பரமேஸ்வரி அம்பலவாணபிள்ளை |
| 140 | யா/பரு/1322 | திரு. வினாசித்தம்பி இராசலிங்கம் |
| 141 | யா/பரு/1328 | திரு. ஜோர்ஜ் அருட்பிரகாசம் |
| 142 | யா/பரு/1329 | திரு. ஞானமுத்து ஜோர்ஜ் |
| 143 | யா/பரு/1333 | திரு. கோபாலகிருஷ்ணர் சிவகுமாரசாமி |
| 144 | யா/பரு/1335 | திரு. சவிரி தேவசகாயம் |
| 145 | யா/பரு/1338 | திரு. கஸ்பார் அலேஸ் |
| 146 | யா/பரு/1346 | திரு. ஆசையர் நடராசா |
| 147 | யா/பரு/1360 | திரு. இராமு சிவஞானசுந்தரம் |
| 148 | யா/பரு/1369 | திரு. குமாரவேலு சபாநாயகம் |
| 149 | யா/பரு/1372 | திரு. சங்கரப்பிள்ளை சின்னையாசெல்லத்துரை |
| 150 | யா/பரு/1390 | திரு. பொன்னையா இராமசாமி |
| 151 | யா/பரு/1396 | திரு. நாகப்பர்கணபதிப்பிள்ளை ஆறுமுகம் |
| 152 | யா/பரு/1411 | திரு. கோபால் சங்கரதாஸ் |
| 153 | யா/பரு/1418 | திரு. ஆழ்வாப்பிள்ளை செல்வரத்தினம் |
| 154 | யா/பரு/1442 | திரு. தம்பையா கணபதிப்பிள்ளை |
| 155 | யா/பரு/1483 | திருமதி. தெய்வானைப்பிள்ளை பஞ்சாட்சரம் |
| 156 | யா/பரு/1489 | திரு. சோமு அருணகிரி |
| 157 | யா/பரு/1497 | திரு. முருகேசு கதிர்காமு |
| 158 | யா/பரு/1500 | திரு. செல்லையா விக்னேஸ்வரமூர்த்தி |
| 159 | யா/பரு/1501 | திரு. வினாசித்தம்பி சோமசுந்தரம் |
| 160 | யா/பரு/1504 | திரு. முத்துக்குமாரு சபாரத்தினம் |
| 161 | யா/பரு/1518 | திரு. வேலுப்பிள்ளை ஆறுமுகம் |
| 162 | யா/பரு/1539 | திரு. கணபதிப்பிள்ளை சபாரத்தினம் |
| 163 | யா/பரு/1540 | திருமதி. இரத்தினம் வேலாயுதம் |
| 164 | யா/பரு/1552 | திரு. சேனாதிராஜசேகரம் ஏகாம்பரநாதன் |
| 165 | யா/பரு/1558 | திரு. செல்லையா பொன்னம்பலம் |
| 166 | யா/பரு/1560 | திரு. சுப்பிரமணியம் இராஜரட்ணம் |
| 167 | யா/பரு/1562 | திரு. அம்பலவாணர் பொன்னுத்துரை |
| 168 | யா/பரு/1563 | திரு. தம்பையா துரைச்சாமி |
| 169 | யா/பரு/1567 | திரு. அந்தோணிப்பிள்ளை பிரான்சீஸ்சேவியர் |
| 170 | யா/பரு/1570 | திரு. அம்பலவாணர் குமரேஸ் |
| 171 | யா/பரு/1579 | திரு. தாமோதரம் கிருஷ்ணமூர்த்தி |
| 172 | யா/பரு/1599 | திரு. சின்னத்தம்பி சிற்றம்பலம் |
| 173 | யா/பரு/1611 | திரு. வேலுப்பிள்ளை வீரவர்கு |
| 174 | யா/பரு/1616 | திரு. நாகன் இரத்தினம் |
| 175 | யா/பரு/1618 | திரு. எட்வேட் ஜோஷீவ |
| 176 | யா/பரு/1619 | திருமதி. இராசரத்தினம் நமசிவாயம் |

(தொடரும்...)

# கத்ரீனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ

# 40 000 தொண்டர்கள் உடனடியாகத் தேவை!

## அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம் அவசர அறிவிப்பு




வொஷிங்ரன் —

அமெரிக்காவில் பாரிய உயிரழிவுகளையும், சொத்திழப்புகளையும் ஏற்படுத்திய கத்ரீனா சூறாவளியால் இலட்சக்கணக்கான மக்கள் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறியுள்ளனர். இவ்வாறு வெளியேறியவர்களுக்கு உணவு, உடைகளை வழங்கவும், தற்காலிக குடியிருப்புக்களை அமைத்துக் கொடுப்பதற்கும் 40 000 தொண்டர்கள் உடனடியாகத் தேவையென அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான உதவிப் பணிகளை மேற்கொள்வதற்கு பல மாதங்களாகவுள்ள நிலையில், தனது 125 வருட கால வரலாற்றில் அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம் மிகப் பாரியளவில் முதன் முறையாக தற்போதுதான் தொண்டர்களை இணைப்பதற்கான அறிவித்தலை விடுத்துள்ளது.

எமது உதவிப் பணிகள் சில வாரங்களிலோ அல்லது சில மாதங்களிலோ முடிந்துவிடப் போவதில்லை எனத் தெரிவித்த செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் ஜோன் டெக்னான், இந்த உதவிப் பணிகளுக்கு எமக்கு அசாதாரணமான ஆட்கள் தேவை. இந்த உதவிப் பணிகளை ஒரு இரவில் முடிக்கலாமென நாம் தீர்மானிக்க முடியாது. பல்லாயிரம் மக்களுக்கான உதவிகளை வழங்க நீண்ட காலம் எடுக்கும். தற்போது 36 ஆயிரம் தொண்டர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 675 தற்காலிக குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.

நியூ ஓர்லியன்ஸில் தற்போது வெள்ளம் வடிந்து வருவதாகவும், இதனால் சடலங்கள் மீட்கப்பட்டு வருவதுடன், இந்த நடவடிக்கைக்கு மோப்ப நாய்களும் ஈடுபடுத்தப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த அழிவு நடவடிக்கைப் பணியைச் சீர்செய்ய அனைவரும் தேசிய ஒற்றுமையுடன் முன்வரவேண்டுமென, செப்ரெம்பர் 11 தாக்குதலின் நான்காமாண்டு நினைவு நிகழ்வில் நேற்று உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார்.

அழிவுகளுக்குள்ளான பகுதிகள் மீளவும் கட்டியெழுப்பப்படுமெனவும் அவர் தெரிவித்தார். அத்துடன் அழிவுகளுக்குள்ளான பகுதிகளைப் பார்வையிட மூன்றாவது தடவையாக நேற்று ஜனாதிபதி புஷ் சென்றார்.

இதேவேளை, அவசரகாலப் பணிக்குழுவின் பிரதம அதிகாரி மைக்கல் பிறவுண் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இவர் தனது பணியைச் சிறப்பாகச் செய்யவில்லை என விமர்சனம் எழுந்த நிலையிலேயே அவரது பதவி நீக்கம் அமைந்துள்ளது.

# சீனாவின் கிழக்கு மாகாணத்தை ரைபூன் சூறாவளி தாக்கியது!

## சுமார் 8 லட்சம் மக்கள் வெளியேற்றம்

பீஜிங் —

சீனாவின் கிழக்குப் பகுதி சியாங்யாங் மாகாணத்திலுள்ள ஆறு நகரங்களை ரைபூன் சூறாவளி தாக்கியதால் சுமார் எட்டு லட்சம் மக்கள் தமது வீடுகளை விட்டு வேறிடங்களுக்கு வெளியேறியுள்ளனர்.

அத்துடன் சுமார் முப்பத்தைந்தாயிரம் கப்பல்கள் மற்றும் படகுகளும் பாதுகாப்புக் காரணமாக துறைமுகத்துக்குத் திரும்பியுள்ளதாக சீனாவின் அரச செய்திச் சேவை சின்குவா தெரிவித்துள்ளது.

ரைபூன் சூறாவளியையடுத்து ஏற்படவுள்ள வெள்ளப்பெருக்கு மற்றும் மண் சரிவுகளுக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்குப் பணிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து இந்த சூறாவளியையடுத்து ஏற்படவுள்ள கடும் மழை மற்றும் வெள்ளப் பெருக்கிலிருந்து மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேறிடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டது.

சூறாவளி தாக்கத்தின் பின்னர் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்த விபரங்கள் இதுவரை வெளியாகவில்லை.




# காஸா எல்லைப் பகுதியை பாதுகாக்க எகிப்திய படையினர் நிறுத்தப்பட்டனர்!

காஸா —

காஸா எல்லைப் பகுதியைப் பாதுகாக்கும் பொறுப்பை எகிப்தியப் படையினர் ஏற்றுள்ளனர்.

இதன் முதற்கட்டமாக 750 எகிப்திய படையினர் அந்தப் பகுதியில் நேற்று முன்தினம் நிறுத்தப்பட்டனர்.




எகிப்திய படையினர் நிறுத்தப்படுவதன் நோக்கம் பலஸ்தீன கிளர்ச்சிவாதிகள் எல்லைப் பகுதி ஊடாக மேற்கொண்டுவரும் ஆயுதக்கடத்தலைத் தடுக்கவே எனத் தெரிவிக்கப்படுகிறது.

பலஸ்தீன கிளர்ச்சிவாதிகளுக்கும், இஸ்ரேல் படையினருக்கும் இடையில் அடிக்கடி மோதல் இடம்பெற்றுவரும் ரபா அகதி முகாமுக்கு அருகிலேயே எகிப்திய படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

எகிப்திய படையினர் இந்தப் பகுதிகளில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதுடன், எகிப்திய பகுதிகளிலுள்ள நிலப் பகுதிகளை சமப்படுத்தும் பணிகளிலும் ஈடுபடுவரென எகிப்திய அதிகாரியான மேஜர் வலீட் சாலே தெரிவித்தார்.

படையினர் இயந்திரத் துப்பாக்கிகளையும், ரொக்கெட் கிரனேட்டுக்களையும் தமது தேவைக்காகப் பயன்படுத்துவரென அதிகாரி மொகமட் யூசுப் தெரிவித்தார்.

இஸ்ரேலுக்கும் எகிப்திற்குமிடையே இடம்பெற்ற உடன்படிக்கையை அடுத்து பலஸ்தீன நிர்வாகப் பகுதிக்கு ஆயுதங்கள் எதுவும் செல்ல அனுமதிக்கப்படமாட்டாதென எகிப்து தெரிவித்த பின்னர் இந்தப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காஸாவிலுள்ள வணக்க ஸ்தலங்களை அழிக்காமல் இஸ்ரேல் படை வெளியேற்றம்!

இஸ்ரேல் —

காஸாப் பகுதியிலுள்ள இஸ்ரேலியர்களின் 20 மத வழிபாட்டுத் தலங்களை அழிக்காமல் இஸ்ரேல் படையினர் வெளியேறவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக நேற்றுக் கூடிய இஸ்ரேலிய அமைச்சரவை- இஸ்ரேலிய மத வழிபாட்டுத் தலங்களை அழிப்பது இஸ்ரேலிய சட்டத்திற்கு முரணானதெனத் தெரிவித்ததையடுத்து மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

கடந்த 38 வருடங்களாக காஸாவை ஆக்கிரமித்திருந்த இஸ்ரேல், இன்று தனது கடைசி இராணுவத்தினரையும் வெளியேற்றுவதாகத் தெரிவித்துள்ளது.

இதேவேளை,நேற்று காஸாப் பிரதேசத்தை வைபவரீதியாக, பலஸ்தீன அதிகாரசபையிடம் ஒப்படைப்பதற்கு இஸ்ரேல் தயாராக இருந்தபோதிலும், இந்த நிகழ்வை பலஸ்தீன அதிகாரசபை பகிஷ்கரித்ததனால் கையளிப்பு வைபவம் தடைப்பட்டுள்ளது.

இதேவேளை இஸ்ரேல் விலகிச் செல்லும் காஸாவிலுள்ள ஆக்கிரமிப்புச் சின்னங்களைத் தம்மால் பாதுகாக்க முடியாதெனவும், எனவே இஸ்ரேலிய மத வழிபாட்டுத் தலங்களை அழிக்க வேண்டுமெனவும் பலஸ்தீன அதிகாரிகள் இஸ்ரேலிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

காஸாவிலிருந்து இஸ்ரேலிய படையினரின் கடைசித் தொகுதி வெளியேறுவதைப் பார்ப்பதற்காக பெருமளவிலான பலஸ்தீனர்கள் கூடியுள்ளனர்.

# கட்சி மாநாட்டில் சந்திரிகாவிடம்...

ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்தது.

இதனிடையே ஜே.வி.பியின் 12 நிபந்தனைகளை லேக் ஹவுஸ் ஊடகங்கள் பிரதானமாக வெளியிட சந்திரிகா ஆத்திரமடைந்தார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதை சரிபார்த்துத்தான் ஊடகங்களிடம் கொடுத்தாரா என்றும் அப்படிச் செய்யாத நிலையில், நீங்கள் இராஜினாமாச் செய்துவிடுங்கள் என்றும் லேக் ஹவுஸ் தலைவர் ஜனதாஸ பீரிஸிடம் சந்திரிகா கோபப்பட்டார்.

லேக் ஹவுஸ் ஊடகங்கள் பிரசுரம் செய்ததவை சரியென்றும் இதர ஊடகங்களும் வெளியிட்டிருக்கின்றன என்றும் சந்திரிகாவுக்கு பீரிஸ் விளக்கம் அளித்தார்.

இந்த நிலையில் - ஜே.வி.பியின் நிபந்தனைகளுக்கும் சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கும் எதிர் முரண்கள் இருப்பதை அவரிடம் பேசிய சுதந்திரக்கட்சியினர் கூறினர். இதையடுத்து மஹிந்த ராஜபக்ஷவை தொலைபேசியில் தொடர்புகொள்ள சந்திரிகா முயன்றார். ஆனால், மஹிந்த கொழும்பில் இல்லை. சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனாவை தனது இல்லத்துக்கு வருமாறு சந்திரிகா அழைத்தார்.

முதலில் இன்றைய நாளிதழைப் படியுங்கள் என்று மைத்திரிபால சிறிசேனாவுக்கு சந்திரிகா அறிவுறுத்தியுள்ளார். கட்சியின் அனுமதியில்லாமல் ஜே.வி.பியின் 12 நிபந்தனைகளை எப்படி மஹிந்த ஏற்கமுடியும் என்று மைத்திரிபாலவிடம் சந்திரிகா கேள்வியெழுப்பினார்.

அன்று மாலை வரை மஹிந்த ராஜபக்ஷ கொழும்பு திரும்பாத நிலையில், மஹிந்தவின் செயலாளர் லலித் வீரதுங்கவிடம் அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா பேசினார். ஜே.வி.பியுடனான ஒப்பந்தம் மாற்றியமைக்கப்படவேண்டும் என்றும், சந்திரிகா குமாரதுங்க திருத்தங்களைக் கொடுத்தனுப்புவார் என்றும் ஒப்பந்தம் குறித்து முடிவெடுக்கக் கூடாதென்றும் கூறியுள்ளார்.

இந்தத் தகவல்கள் அனைத்தையும் கேட்ட மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் மங்கள சமரவீரவுடன் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் மஹிந்தவின் கருத்தை ஊடகங்கள் திரித்து எழுதிவிட்டதாக சமரவீர கூறினார். இதனால் மங்கள சமரவீர மீதும் சந்திரிகா கோபமடைந்தார்.

இந்தச் சூழலில் சுதந்திரக்கட்சியின் 54 ஆவது ஆண்டு மாநாடு கொழும்பு குதிரைப்பந்தயத் திடலில் நடைபெற்றது.

சந்திரிகாவும் மஹிந்தவும் அருகருகில் அமர்ந்திருந்த நிலையில், மகிழ்ச்சியாக பேசிக்கொண்டிருப்பதாகத் தோற்றமளித்தனர் - தொடக்கத்தில்.

ஆனால், சிறிது நேரத்திலேயே மகிந்த ராஜபக்ஷவுடன் பொதுமேடையில் வைத்தே சந்திரிகா வாக்குவாதப்பட்டார்.

அவர்களுக்கு இடையிலான உரை யாடல் இதோ...!

*சந்திரிகா:* நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? கட்சியில் இருந்துகொண்டு இப்படிச் செய்யலாமா ?

ராஜபக்ஷ: நான் கட்சியின் வேட்பாளர். என்னை என்னுடைய பாதையில் போகவிடுங்கள். தயவுசெய்து என்னைச் செயற்படவிடுங்கள்.

சந்திரிகா: நீங்கள் கட்சியின் வேட்பாளர்தான். அதுக்காக நாடு பழைய நிலைக்குப் போகவேண்டும் என்று நினைக்கிறீர்களா?

ராஜபக்ஷ: இதுபற்றி பின்னர் பேசலாம். எனக்கு பல விடயங்கள் தெரியவில்லை. ஆனால், எனக்கு நீங்கள் பாடம் நடத்தவேண்டாம். அமைதி முயற்சிகள் தொடர்பாக என்னை எப்போதாவது அழைத்தீர்களா? தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்துக்காவது என்னை அழைத்தீர்களா?

நீங்கள் ஜே.வி.பியை வெளியே அனுப்பாமல் இருந்திருந்தால் அவர்கள் நம்முடன் இருந்திருப்பார்கள். நிபந்தனையற்ற ஆதரவும் அளித்திருப்பார்கள்.

சந்திரிகா : நான் ஒன்றும் ஜே.வி.பியை வெளியே அனுப்பவில்லையே. அவர்களாகத்தானே போனார்கள்.

ராஜபக்ஷ : ஜே.வி.பி. இல்லாமல் என்னால் வெற்றிபெறமுடியாது. அதனால் அவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொண்டேன். இது தொடர்பாக மங்கள சமரவீரவிடம் விளக்கமான அறிக்கை வெளியிடவும் சொல்லியிருக்கிறேன்.

இந்த உரையாடலை ஊடகவியலாளர் படம் பிடித்தனர். இருவரின் உடல் மொழிகளும் அவர்களது கடும் வாக்குவாதத்தை வெளிப்படுத்தின.

சிறிதுநேரம் கழித்து சந்திரிகாவின் தோள்பட்டையைத் தட்டிய மஹிந்த ராஜபக்ஷ, மன்னிப்பு கேட்கும் வகையில் இதை இப்படியே நிறுத்திக் கொள்வோம் என்றாராம்.

இதன்பின்னர் தனது ஆதரவாளர்களிடம் பேசிய மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்கவுடன் நான் இப்போது மோதவில்லை. சந்திரிகாவுடன்தான் மோதி வருகிறேன் என்றாராம்.

1994ஆம் ஆண்டு சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டபோது, கூட்டாட்சி முறையிலான தீர்வு குறித்து அறிவித்தார். அப்போது அவர் கட்சியிடமோ, கட்சியின் மையக்குழுவிடமோ கலந்தாலோசனை நடத்தாமல் தன்னிச்சையாகவேதான் அறிவித்திருந்தார் என்றும் மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டி ஆதங்கப்பட்டார்.

ஜே.வி.பி.யுடனான ஒப்பந்தம் கைச்சாதிடுவதற்கு முன்னையநாள் இரவு, ஒப்பந்தம் தொடர்பான திருத்தங்களை நிமால் சிறிபால டி சில்வா மூலம் மஹிந்தவுக்கு சந்திரிகா கொடுத்தனுப்பியுள்ளார். பின்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்தவை தனது இல்லத்துக்கு அழைத்த சந்திரிகா, தான் சுட்டிக்காட்டிய திருத்தங்களை அதில் இடம்பெறச் செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

இதைக் கூறுவதற்காக சுசில் பிரேம ஜயந்தவும் அலரி மாளிகைக்குச் சென்றார். ஆனால், எதையும் கேட்கும் நிலையில் மஹிந்த இருக்கவில்லை. கடந்த வியாழக்கிழமை காலை சந்திரிகா குமாரதுங்கவைச் சந்திப்பதாக மட்டும் சொல்லி அனுப்பியிருக்கிறார் மஹிந்த.

ஆனால், வியாழக்கிழமை காலை சந்திரிகா கொழும்பில் இல்லை. இதனால், மஹிந்த ஏமாற்றமடைந்து சந்திரிகாவின் சகோதரி சுனீத்ராவிடம் பேசியுள்ளார். ஜே.வி.பியுடனான ஒப்பந்தம் குறித்து சந்திரிகா குமாரதுங்கவிடம் விளக்கம் வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். இருப்பினும், சந்திரிகா கொழும்பில் இல்லாததால், அனுரா பண்டாரநாயக்க நிகழ்வுக்கு அழைக்கப்பட்டார்.

அனுராவும் எந்தவித குறிப்பையும் காட்டாத முகத்துடன் சம்பிரதாயத்துக்காக அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டதுபோல் வந்து சென்றார்.

இந்த நிகழ்ச்சியைப் படம்பிடித்த ரூபவாஹினியினருக்கு அதன் தலைவர் எம்.எம். சுபைர், பேச்சுக்களையும் பதிவு செய்யச் சொல்லியிருக்கிறார்.

ஆனால், ரூபவாஹினியின் இயக்குநரும், சந்திரிகாவின் நம்பிக்கைக்குரியவருமான நிசாந்த ரணதுங்க, செய்தியை மட்டும் ஒளிபரப்புங்கள், பேச்சுக்களை ஒளிபரப்பக் கூடாது என்று கூறியிருக்கிறார்.

இதை நிராகரித்த சுபைர், செய்திக் கட்டுப்பாட்டு அறைக்கு தொலைபேசியில் தொடர்புகொண்டு செய்தி மற்றும் பேச்சுக்களை கண்டிப்பாக ஒளிபரப்ப உத்தரவிட்டார்.

இருப்பினும், நிசாந்த ரணதுங்க மீண்டும் சுபைரை தொலைபேசியில் அழைத்து, ஊடகத்துறை பிரதி அமைச்சர் டிலான் பெரேரா, பேச்சுக்களை ஒளிபரப்ப வேண்டாம் என்று உத்தரவிட்டுள்ளதாகக்கூற, சுபைரும் வேறு வழியின்றி பேச்சுக்களை ஒளிபரப்பவில்லை.

சந்திரிகா - ராஜபக்ஷ மோதல் நடைபெறும் நிலையில் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவரும் அமைச்சருமான ஒருவரும், பிரதி அமைச்சர் ஒருவரும் விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளதாகவும், ஜே.வி.பி. - மஹிந்த ராஜபக்ஷ உறவைக் காரணம் காட்டி இந்த விலகல் இருக்கக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

இந்த விலகல் மூலம் சுதந்திரக் கட்சியில் அதிருப்திக் குழு ஒன்றை வெற்றிகரமாக உருவாக்கிய பெருமை ஜே.வி.பி. - மஹிந்தவை இணைத்தவர்களுக்கே சேரும் என்றும் கொழும்பு ஊடகவியலாளர்கள் கூறுகின்றனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சந்திரிகாவின் கடிதம் குறித்து மௌனம் காக்கும் மஹிந்த!

கொழும்பு —
ஜே.வி.பியின் ஒற்றையாட்சிக் கோரிக்கைக்கு ஒப்புக்கொண்ட பின்னர் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திக்கப் போனால், ஒரு துண்டு கேக் மட்டுமே சாப்பிட்டு விட்டுத் திரும்ப முடியும் - வேறு எதுவும் நடக்காது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி சந்திரிகா அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பியுடனான உடன்பாடு கட்சியின் கொள்கைக்கு முரணானது எனத் தெரிவித்து மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி சந்திரிகா எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

எங்கள் கட்சியின் தலைவர்கள் மூலமாக ஜே.வி.பியுடன் நீங்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளதாக அறிந்துகொண்டேன்.

கட்சியின் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களை, தொலைபேசி வழியாகவும், அழைப்பிதழ்கள் கொடுத்தும் அழைத்துள்ளீர்கள். இருந்த போதும் இப்படியான ஒரு முக்கியமான நிகழ்வு குறித்து என்னிடம் நீங்கள் தெரிவிக்கவில்லை.

முக்கிய முடிவுகளை மேற்கொள்ளக்கூடிய சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவுக்கும் நீங்கள் தெரியப்படுத்தவில்லை.

இந்த ஒப்பந்தம் மூலம் சுனாமி மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை நிராகரித்துள்ளீர்கள். இந்தப் பொதுக்கட்டமைப்பானது நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு விட்டது. அமைச்சரவையால் ஒருமனதாக ஏற்கப்பட்டது.

கட்சியின் மத்திய குழு பிரதேச மாவட்ட அளவிலான நிர்வாகிகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஜுன் 24 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உங்கள் ஒப்புதலுடன் இந்தப் பொதுக்கட்டமைப்புத் தாக்கல் செய்யப்பட்ட பின்னரும் இதை ஏற்கமுடியாது என்று எப்படிச் சொல்கிறீர்கள்? இரு மாதங்கள் முடிவடைந்த பிறகு பொதுக்கட்டமைப்பை நிராகரிப்பது ஏன்?

அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட பின்னர் கைச்சாத்திடப்போகும் நாளன்று காலை 9.55 மணிக்கு என்னை அழைத்தீர்கள். நீங்கள் என்ன தகவலை என்னிடம் தெரிவிக்க விரும்புகிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. ஒருவேளை இந்த ஒப்பந்தம் குறித்து என்னிடம் சொல்ல நீங்கள் நினைத்திருந்தால் அது கேலிக்குரியது.

இந்த ஒப்பந்தம் குறித்து என்னிடம் தெரிவித்திருக்கவேண்டும். திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பிறகு அதை ஜே.வி.பியிடம் எடுத்துக்காட்டியிருக்கவேண்டும். கட்சியின் மத்திய குழுவின் ஒப்புதலுக்கும் அனுப்பியிருக்கவேண்டும். என்னுடனான உரையாடலில் கூட இன்று ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவது குறித்து தெரிவிக்கவில்லை. ஒன்றை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன் - நீங்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் சுதந்திரக் கட்சியின் ஒழுங்குகளை மீறிச் செயல்படுகிறீர்கள் என்பதுதான் அது.

நாடு பிளவுபடாமல் தடுக்கவும், அமைதியை நிலைநாட்டவும் அதிகாரப் பகிர்வு முறையை நமது அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. உங்கள் ஒப்பந்தப்படி ஒற்றையாட்சி முறையில் அதிகாரப்பகிர்வு எப்படி சாத்தியமாகும். ஒற்றையாட்சி முறையில் எப்படி தீர்வுகாணமுடியும்.

ஒற்றையாட்சி கோரிக்கையை ஒப்புக்கொண்ட பிறகு நீங்கள் பிரபாகரனைச் சந்தித்துப் பேசப்போனால் அங்கு போய் ஒரு துண்டு கேக் மட்டும் சாப்பிட்டுவிட்டு திரும்பமுடியும் வேறு எதுவும் நடக்காது. உங்கள் ஒப்பந்தம் மூலம் எப்படியான அமைதி முயற்சிகளை மேற்கொள்ளப் போகிறீர்கள் என்பதை எனக்கும், நாட்டுக்கும் தெரியப்படுத்துங்கள்.

சிங்களத் தீவிரவாதிகளுடன் இணைந்துகொண்டு எப்படி இந்தப் பிரச்சினையைக் கையாளப்போகிறீர்கள் என்பதை நாட்டு மக்களுக்கு நீங்கள் விளக்கவேண்டும். ஜாதிக ஹெல உறுமயவுடனும் நீங்கள் ஒப்பந்தம் செய்யவுள்ளதாக ஊடகங்கள் கூறுகின்றன. அப்படியான ஒரு ஒப்பந்தம் நடந்தால் சுதந்திரக் கட்சி சில முடிவுகளை மேற்கொள்ளநேரிடும் என்றும் அதில் சந்திரிகா மேலும் எச்சரித்துள்ளார்.

ஜே.வி.பியுடனான ஒப்பந்தம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருந்த விமர்சனங்களுக்கு மஹிந்த ராஜபக்ஷ இதுவரை பதிலளிக்கவில்லை.

தேர்தல் பிரசாரத் கூட்டங்களில் தான் இருப்பதான தோற்றத்தை உருவாக்கிவருகிறார். சந்திரிகாவும் நியூயோர்க் பயணம் சென்றுள்ளதால், இப்பிரச்சினையில் தற்காலிகமாக மௌனம் காப்பதே நல்லது என்று மஹிந்த எண்ணுவதாக அவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரக்குழுத் தலைவரான பசில் ராஜபக்ஷவிடம் இது குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பிய போது - திட்டமிட்டபடியான தேர்தல் பிரசாரங்கள் நடைபெறுகின்றன. சந்திரிகாவின் கடிதம் குறித்து கருத்துத் தெரிவிக்க இயலாது என்றார்.

## பனையில் தொங்கிய தொழிலாளியின் சடலம்!

நெடுந்தீவு —
நெடுந்தீவு கிழக்குப் பகுதியில் 25 அடி உயரமுள்ள பனையொன்றில் தொங்கிய சீவல் தொழிலாளியின் சடலம் உறவினர்களால் மீட்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த எஸ்.பூவிலிங்கம் (வயது55) என்ற குடும்பஸ்தரின் சடலமே மீட்கபட்டது.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் நெடுந்தீவு பொலிஸாரின் உதவியுடன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மரண விசாரணைக்காக கொண்டு வரப்பட்டு, பின்னர் நேற்று மரண விசாரணை முடிந்து உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

(113)

## ஐ.தே.க தேர்தல் அறிக்கை 17ஆம் திகதி வெளியிடப்படும்!

கொழும்பு —
ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் அறிக்கை எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறும் அந்தக் கட்சியின் மாநாட்டில் வெளியிடப்படவுள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு, இளைஞர் வேலைவாய்ப்பு, அரச நிறுவனங்கள் மறு சீரமைப்பு, விவசாயிகள் பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்களில் ஐ.தே.கட்சியின் நிலை அந்தத் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்படும். இது குறித்து கருத்து தெரிவித்த ஐ.தே.க.துணைப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க-

அமைதிக்கான தேர்தல் அறிக்கையாக அது இருக்கும் என்றும் ஐ.தே. கட்சி ஜனாதிபதி பதவியைப் பொறுப்பேற்றால் யுத்தநிறுத்த ஒப்பந்தம் குறித்த பேச்சுக்கள் மீளத் தொடங்கப்பட்டு முழு அளவில் செயற்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

## ட்ரக்ரர் மீது துப்பாக்கிப் பிரயோகம்!

மட்டக்களப்பு —
வாழைச்சேனை - பேய்த்தாளை பஸ்நிலையமருகே பொலிஸார் பயணம் செய்த ட்ரக்டர் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

நேற்று நண்பகல் 12.15 மணியளவில் ஓட்டமாவடி சந்தையில் இருந்து வாழைச்சேனை கல்குடா வீதியூடாகத் திரும்பிக் கொண்டிருந்த பொலிஸார் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதையடுத்து பொலிஸாரும் பதில் தாக்குதல் நடத்தினர். எனினும் இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. பஸ் ஒன்று மட்டும் சேதமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## ஜே.வி.பி - மஹிந்த...

இடங்களில் தேர்தல் பிரசாரங்களில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் -

விடுதலைப் புலிகள் கூட்டாட்சி அடிப்படையிலான தீர்வுக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். ஆனால் ஜே.வி.பி - மஹிந்த ராஜபக்ஷ ஒப்பந்தமானது விடுதலைப் புலிகள் தனியரசுக் கோரிக்கையை மீளவும் எழுப்புவதற்கு உதவிசெய்யக்கூடும்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆதரிக்கிறார். ஆனால் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ அதை மாற்ற முயற்சிக்கிறார்.

சுனாமி மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை நாடாளுமன்றத்தில் ஆதரித்துப் பேசிய மஹிந்த ராஜபக்ஷ - ஜே.வி.பியின் தூண்டுதலால் இப்போது எதிர்த்துப் பேசி இரட்டை நிலைப்பாட்டை மேற்கொண்டுவருகிறார். இது நாட்டை மீண்டும் யுத்தப் பாதைக்கு அழைத்துச்செல்லும்.

ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அமைதி முயற்சிகள் அனைத்துக்கும் ஐ.தே.க முழு ஆதரவை அளித்தது. சில்லறைத்தனமான அரசியல் இலாபங்களைப் பெற ஐ.தே.க விரும்பவில்லை. நாட்டில் நிலையான அமைதி நிலவவேண்டும் என்பதில் ஐ.தே.க முழுமையாக அக்கறை கொண்டுள்ளது.

ஐ.தே.க ஆட்சிப் பொறுப்பேற்றுடன் மக்களின் வாழ்க்கைச் செலவினத்தைக் கட்டுப்படுத்துவதுடன், இன்னமும் தற்காலிக முகாம்களில் வாழ்ந்து வரும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்று ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இறைச்சிக்கு...

பட்டு வந்த சினைப்பட்டிருந்த பசு மாடு நேற்று அதிகாலை காணாமல் போயிருந்தது. இதனைத் தேடிவந்த மாட்டின் உரிமையாளர் நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலகத்துடன் இணைந்துள்ள கொல்களத்துக்கு அருகே வந்த போது - உழவு இயந்திரமொன்றில் தனது மாட்டின் தோல் மற்றும் சினை கன்று உள்ளிட்ட கழிவுகள் ஏற்றப்படுவதைக்கண்டார்.

உடனடியாக அயலவர்களின் உதவியோடு உழவு இயந்திரத்தையும், இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கருதப்படும் ஆறு பேரையும் மடக்கிப்பிடித்து கோப்பாய் பொலிஸாரிடம் மாட்டின் உரிமையாளர் ஒப்படைத்ததாகத் தெரியவருகிறது.

பிரதேச சபை கொல்களத்தில் வைத்து பசு மாடு இறைச்சிக்காக வெட்டப்பட்ட சம்பவத்தைக் கேள்வியுற்ற பொதுமக்கள் ஆத்திரமடைந்து கொக்குவில் உப அலுவலக பெயர்ப்பலகை, சமுர்த்தி பெயர்ப்பலகை, கதவுகள், கண்ணாடி, தளபாடங்களை அடித்து நொறுக்கி சேதப்படுத்தினர்.

அத்துடன் பிரதேசசபை உப அலுவலகத்துடன் இணைந்த கொல்களத்தையும் அடித்து நொறுக்கி தீ வைத்தனர்.

பொதுச்சுகாதார அதிகாரிகளின் அனுமதியின்றி கொல்களத்தில் மாடு வெட்ட முடியாதென்றும், இந்தச் சம்பவம் அவர்களுக்குத் தெரியாமல் நடந்திருக்க முடியாதெனவும் பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## வெலிக்கந்த...

தொடர்பாக விசாரணைக்குச் சென்ற பொலிஸார் அந்த இடத்திலிருந்து சற்றுத் தொலைவில் - கரப்பொல குளத்தருகே இரண்டாவது இளைஞரின் சடலத்தைக் கண்டுபிடித்தனர்.

மீன்பிடிக்கச் சென்ற இவரும் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் என கருதப்படுவதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## திருகோணமலை...

குணரட்ண என்ற பொலிஸ் கொன்ஸ்டபிளும் உபாலி என்ற பொது மகனும் காயமடைந்தவர்களாவர்.

இவர்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக திருகோணமலை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஜனாதிபதி...

ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையில் முரண்பாடு இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியே பிரசாரத்தை முன்னெடுத்து வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(01)

## அனுமதியின்றி...

மன்னார் பொலிஸாருக்கோ விடுதலைப் புலிகளுக்கோ தமது வருகை குறித்த தகவல் தெரிவிக்காமலே கொக்குபடையான் கிராமத்திற்கு நேற்றுமுன்தினம் சென்றனர்.

இவர்களை விசாரணை செய்த புலிகள் முன் அனுமதி பெறாது தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் நுழைந்த மூன்று ஆண் பொலிஸாரை மட்டும் சந்தேகத்தின் பேரில் கைது செய்த பின்னர் இரண்டு பெண் பொலிஸாரையும் நான்கு கிறிஸ்தவ குருக்களையும் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்ல அனுமதித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சப் இன்ஸ்பெக்டர் உட்பட மூன்று பொலிஸாரும் விடுதலைப் புலிகளால் தமிழீழ காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## நேரடி...

ராஜபக்ஷ கையெழுத்திட்டார்.

இந்த நிலையில், தன் மீதான அதிருப்திகளை திசை திருப்ப ஊடகங்கள் ஊடாக தன்னோடு நேரடியாக விவாதிக்க வருமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்குமாறு ராஜபக்ஷவை அவரது ஆதரவாளர்கள் வலியுறுத்தினர்.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷ இதை நிராகரித்துவிட்டார்.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் - மஹிந்த ராஜபக்ஷவுடன் விவாதிக்க ரணில் விக்கிரமசிங்க எப்போதும் தயாராக இருக்கிறார். மஹிந்த ராஜபக்ஷவும் இந்த சவாலை ஏற்பார் என்று நம்புவதாகக் கூறினார்.

## கூட்டணிக் கட்சிகளின்...

சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் மஹிந்த ராஜபக்ஷ மீதான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் சரி எடுக்கப்படாவிட்டாலும் சரி - இவர்கள் தேர்தல் பிரசாரங்களுக்கு செல்லப்போவதில்லையென திட்டவட்டமாகத் தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, மஹிந்தராஜபக்ஷ ஜே.வி.பி யுடன் கூட்டணிவைத்தது குறித்து பொதுஜன ஐக்கிய முன்னணியில் இடம்பெற்றிருக்கும் இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் தேசிய ஐக்கிய முன்னணி ஆகியனவும் விசனமடைந்திருப்பதாக தெரியவருகிறது.

இந்த விடயம் தொடர்பாக மேற்படி கட்சிகள் உயர்மட்டக் கூட்டங்களை நடத்தியபோது - பல்வேறு தலைவர்களும் மஹிந்த ராஜபக்ஷவின் முடிவு குறித்து கவலை வெளியிட்டதுடன், புதிய அரசியல் நிலை குறித்து ஆழமாகப் பரிசீலித்தே முடிவு எடுக்கவேண்டுமென கருத்துத் தெரிவித்தனர்.

லங்கா சமசமாஜக்கட்சி இந்த வாரம் தனது நிறைவேற்றுக்குழுவை கூட்டி இது குறித்து ஆராயவுள்ளது.

இதனால் சந்திரிகாவின் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள பற்றி வீரக்கோன், பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்டக்குழுவும் இந்த நிலவரம் குறித்து நேற்று கூடிஆராய்ந்தது. தேசிய ஐக்கிய முன்னணியும் இது குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகிறது.

சிறுபான்மை மக்களின் நலனுக்கு விரோதமாக செயற்படும் ஜே.வி.பியுடன் மஹிந்தராஜபக்ஷ கூட்டு சேர்ந்திருப்பதால் - ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு ஆதரவாக பிரசாரங்கள் மேற்கொள்வதிலிருந்து ஒதுங்குவது குறித்தும் இந்தக் கட்சிகள் ஆராய்ந்து வருவதாகவும் தெரியவருகிறது.

இந்த நெருக்கடியால் மஹிந்த ராஜபக்ஷ தற்போது ஜே.வி.பியினருடன் மட்டுமே இணைந்து பிரசாரங்களை மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது.

## ஹெல உறுமய...

8 நிபந்தனைகள் தொடர்பில் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்தால் மாத்திரமே, அவருக்கு தாம் ஆதரவு வழங்கப்போவதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று ஆரம்பம்
A/L - 2006
DAY CLASS
(வர்த்தகப் பிரிவு)
காலை - 8.30
DMI
JAFFNA
(சி-4576)

பட்டதாரி பயிலுனர் ஆசிரிய நியமனத்தில் தவறவிடப்பட்டவர்களுக்கான அவசர அழைப்பு

ஆசிரிய நியமனத்தில் தவறவிடப்பட்ட பட்டதாரி பயிலுனர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று (12.09.2005) காலை 7.00 மணிக்கு யாழ். வலயக் கல்வி அலுவலக முன்றலில் நடைபெறும்.

இதில் **அவசியமான தீர்மானங்கள்** எடுக்கவிருப்பதால், அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பாதிக்கப்பட்ட பட்டதாரி பயிலுனர்கள்

(2052)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.09.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.